# ஹேய்டல்பர்க் உபதேசம்

# THE HEIDELBERG CATECHISM

# ஹேய்டல்பார்க் உபதேசம்

*First Edition* : February 2006 : 2000 Copies
*Second Edition* : September 2006 : 5000 Copies

© Copyright : Rev. Gopalsamy Jacob

*No part of this book may be reproduced or transmitted in any form or by any means, electronic or mechanical, including photocopy, recording or any information storage and retrieval system, without permission in writing from the publisher.*

*Publisher*
The Reformed Churches in India
43, Murthy Nagar,
Padi, Chennai - 600 050.

# ஹேய்டல்பர்க் உபதேசம்

ஹேய்டல்பர்க் உபதேசம் என்பது சீர்திருத்த திருச்சபையின் இரண்டாவது இறையியல் கோட்பாடு ஆகும். இந்த கோட்பாடு 1559 முதல் 1576 வரை ஜெர்மனியில் உள்ள பலாடினேட் என்ற மாகாணத்தின் தலைவராய் இருந்த பிரடரிக் III அவர்களின் வேண்டுகோளின்படி பல்கலைக்கழகத்தில் இறையியல் பேராசிரியராய் இருந்த இருபத்திஎட்டு வயது நிரம்பிய சகரியஸ் அரஷியஸ்ஸையும், தன்னிடம் போதகராய் இருந்த இருபத்தி ஆறு வயது நிரம்பிய காஸ்பர் ஒலிவியன்ஸ்யிடமும் வாலிபர்களையும், போதகர்களையும், ஆசிரியர்களையும் போதிக்க இந்த உபதேசத்தை எழுத உத்திரவு கொடுத்தார். இந்த உபதேசத்தை தயார் செய்ய பிரட்ரிக் எல்லா இறையியல் ஆசிரியர்களின் ஆலோசனையையும் ஒத்துழைப்பையும் பெற்றார். ஹேய்டல்பர்க் ஆட்சிக் குழு 1563 ஜனவரி 19ஆம் நாள் ஹேய்டல்பர்க் உபதேசத்தை ஏற்றுக்கொண்டு ஜெர்மனி மொழியில் பிரட்ரிக்கின் முன்னுரையோடு அச்சிட்டு வெளியிட்டது. அதே வருடத்தில் இரண்டாவது மற்றும் மூன்றாவது ஜெர்மன் பதிப்புகள் சில மாற்றங்களோடு லத்தீன் மொழியிலும் ஹேய்டல்பர்க்கில் வெளியிட்டது. ஒவ்வொரு ஞாயிறு அன்றும் திருச்சபையில் இந்த உபதேசம் போதிக்கப் படும் வகையில் ஐம்பத்தி இரண்டு பாகங்களாக பிரிக்கப்பட்டது.

இந்த ஹேய்டல்பர்க் உபதேசம் வெளியிடப்பட்ட உடன் நெதர்லாந்து தேசத்தில் பெட்ரஸ் டாதேனஸ் என்பவரால் டச்சு மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு 1566ரில் வெளியிடப்பட்ட ஜெனிவன் சங்கீதங் களோடு சேர்க்கப்பட்டது. அதே ஆண்டில் பீட்டர் காபிரியேல் என்பவர் ஆம்ஸ்டர்டாமில் உள்ள தன்னுடைய சபையினர்க்கு ஞாயிறு மாலை பிரசங்கத்தில் இந்த உபதேசத்தைப் போதித்து முன் உதாரணமானார். பதினாறாம் நூற்றாண்டில் இருந்த தேசிய ஆட்சிக்குழு இந்த உபதேசத்தை தன்னுடைய மூன்று இறையியல் கோட்பாடுகளில் ஒன்றாக இதை ஏற்றுக்கொண்டு திருச்சபையின் பொறுப்பாளர்கள் இதை கடைபிடிக்கவும், போதகர்கள் இதை போதிக்கவும் வாக்குறுதியாக்கியது. 1618-19தில் டார்ட் என்ற இடத்தில் கூடிய ஆட்சிக்குழு இந்த வாக்குறுதியை கட்டாய மாக்கியது.

இந்த ஹேய்டல்பர்க் உபதேசம் அநேக மொழிகளில் அச்சிடப்பட்டு அதிகமாக ஈர்க்கக்கூடிய அதே வேளையில் சீர்திருத்த காலகட்டங்களில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உபதேசங்களில் ஒன்றாக விளங்கியது.

# 1 கர்த்தருடைய நாள்

1. **வினா : உன்னுடைய வாழ்விலும் சாவிலும் உனக்கு ஆறுதலாய் இருப்பது எது?**

விடை : நான் எனக்கு சொந்தமல்ல என்பதும்[1], என் சரீரமும் ஆத்துமாவும், இவ்வாழ்விலும் சாவிலும்[2] என்னுடைய உண்மையுள்ள இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவுக்கே சொந்தம் என்பதுமே[3].

மேலும் என்னுடைய எல்லா பாவங்களுக்கும் தன்னுடைய இரத்தத்தை பரிகாரமாக செலுத்தியதுமல்லாமல்[4] எல்லாவித அந்தகார சக்திகளிடமிருந்தும் என்னை விடுதலையாக்கினார்[5].

மட்டுமல்ல, என்னுடைய பரலோக பிதாவின் சித்தமில்லாமல் என் தலைமயிரில் ஒன்றும்[6] தரையில் விழாத வண்ணம் என்னை பாதுகாக்கிறார்[7]. எனவே சகலமும் என்னுடைய இரட்சிப்புக்கேதுவாக நடந்தேறுகிறது[8].

ஆகையால் அவருடைய பரிசுத்த ஆவியானவரால் அவர் எனக்கு நித்திய வாழ்வை உறுதி செய்துள்ளார்[9]. எனவே இன்று துவங்கி அவருக்காக நான் முழுமனதோடு வாழ என்னை தயார் செய்கிறார்[10].

---

1. கொ. 6 : 19-20
2. ரோ. 14 : 7-9
3. 1 கொ. 3 : 23. தீத்து 2 : 14
4. 1 பே. 1 : 18 : 19 1 யோ 1 : 7.2 : 2
5. யோ. 8 : 34-36, எபி 2 : 14-15. 1 யோ. 3 : 8
6. மத். 10 : 29-31. லூக். 21 : 16-18
7. யோ. 6 : 39-40. 10 : 27-30, 2 தெச. 3 : 3, 1 பே. 1 : 5
8. ரோ. 8 : 25
9. ரோ. 8 : 15-16, 2 கொ. 1 : 21-22, 5 : 5 எபே. 1 : 13-14
10. ரோ. 8 : 14

2. **வினா : இந்த ஆறுதலின் சந்தோஷத்தை வாழ்விலும் சாவிலும் அனுபவிக்க நீ தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?**

விடை : முதலாவதாக, நான் தெரிந்து கொள்ள வேண்டியது என்னுடைய பாவமும் அதனால் உண்டான வேதனையும் மிகவும் பெரியதும் என்றும்[1]

இரண்டாவதாக, இந்த பாவத்திலிருந்தும், அதன் வேதனையில் இருந்தும் எவ்வாறு இரட்சிப்படைய வேண்டும் என்றும்[2]

மூன்றாவதாக, இந்த இரட்சிப்புக்குள் நான் எவ்வாறு தேவனுக்கு நன்றியறிதலோடு இருக்க வேண்டும் என்பதுமே.[3]

---

1. ரோ. 3 : 9, 10 : 1, யோ. 1 : 10
2. யோ. 17 : 3, அப. 4 : 12, 10 : 43
3. மத். 5 : 16, ரோ. 6 : 13, எபி. 5 : 8-10, 1 பே. 2 : 9-10

பாகம் ஒன்று

# நம்முடைய பாவமும் துன்பமும்

## கர்த்தருடைய நாள் 2

**3. வினா : உன்னுடைய பாவத்தைக் குறித்தும் அதனால் உண்டான துன்பத்தைக் குறித்தும் எங்கிருந்து தெரிந்து கொண்டாய்?**

விடை : தேவனுடைய நியாயப்பிராணமத்திலிருந்து.

1. உபா. 6 : 5

**4. வினா : தேவனுடைய நியாயப் பிரமாணம் நம்மிடமிருந்து எதிர்பார்ப்பது என்ன?**

விடை : கிறிஸ்துவானவர் மத்தேயு 22ம் அதிகாரத்தில் சுருக்கமாக இதைக் குறித்து கூறி இருக்கிறார். உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுமனதோடும் அன்பு கூருவாயக. இதுவே முதலாம் பிரதான கற்பனை.[1]

இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பதே. இவ்விரண்டு கற்பனைகளிலும், நியாயப் பிரமாணம் முழுமையும் தீர்க்க தரிசனங்களும் அடங்கி இருக்கிறது என்பதே.[2]

1. உபா. 6 : 5
2. லேவி. 19-18

**5. வினா : இவைகளை முழுமையாக கடைபிடிக்க உன்னால் முடியுமா?**

விடை : முடியாது.[1]

ஏனென்றால் இயற்கையிலேயே நான் தேவனையும் மனிதனையும் வெறுக்கும் சுபாவம் உள்ளவன்.[2]

1. ரோ. 3 : 10 : 23. 1 யோ 1 : 8, 10
2. ஆதி 6 : 5, 8 : 21, எரே. 17 : 9, ரோ. 7 : 23, 8 : 7, எபி. 2 : 3, தீத்து 3 : 3

# கர்த்தருடைய நாள் 3

**6. வினா : அப்படியென்றால் தேவன் மனிதனை பலவீனனாகவும் முறைகேடுள்ளவனாகவும் சிருஷ்டித்தாரா?**

விடை: இல்லை

அதற்கு மாறாக தேவன் மனிதனை நல்லவனாகவும்,[1] தன்னுடைய சாயலிலும் படைத்தார்.[2] அதாவது உண்மையான நேர்மையோடும், பரிசுத்தத்தோடும்[3] தன்னைப் படைத்த தேவனை சரியாக தெரிந்துகொண்டு[4] அவரை மனதார நேசித்து அவரோடே நித்தியகாலமாக ஆசிர்வாதத்தோடு வாழ்ந்து அவரை போற்றி துதிக்கவே படைத்தார்[5].

---

1. ஆதி. 1 : 31
2. ஆதி. 1 : 26-27
3. எபே. 4 : 24
4. கொலே. 3 : 10
5. சங். 8

**7. வினா : அப்படியென்றால் எங்கிருந்து மனிதனுக்கு இந்த சீர்கெட்ட சுபாவம் வந்தது?**

விடை : நம்முடைய ஆதி பெற்றோர் ஆதாம் ஏவாளின் கீழ்ப் படியாமல் பாவத்தில் வீழ்ந்ததால்[1] நம்முடைய சுபாவமும் களங்கப்பட்டு[2] நாம் அனைவரும் பாவத்தில் கர்ப்பந் தரித்து பிறந்தோம்[3].

---

1. ஆதி. 3
2. ரோ. 5 : 12, 18, 19
3. சங். 51 : 5

8. **வினா : நாம் முழுவதுமாக நன்மை செய்ய திராணியற்று தீங்கிற்கு சுபாவப்படுமளவுக்கு களங்கப்பட்டுள்ளோமோ?**

விடை : ஆம்.[1]

தேவனுடைய ஆவியானவரால் நாம் மறுபடியும் பிறவா விட்டால்.[2]

1. ஆதி. 6 : 5, 8 : 21, யோபு 1 : 44, ஏசா 53 : 6
2. யோ. 3 : 3-5

## கர்த்தருடைய நாள் 4

**9. வினா : அப்படியென்றால் தேவன் தன்னுடைய நியாயப் பிரமாணத்தின் மூலம் மனிதனால் கடைபிடிக்க முடியாததை எதிர்பார்ப்பதால் அவன் மனிதனுக்கு அநீதி செய்யவில்லையா?**

விடை : இல்லை.

தேவன் மனிதனை நியாயப் பிரமாணத்தை கடைபிடிக்கும் திறனுடையவனாக படைத்தார்.[1] ஆனால் மனிதன் சாத்தானின் தூண்டுதலால்[2] துணிகரமாக கீழ்படியாமல்[3] தனக்கும் தன் சந்ததிக்கும் இவைகளை பரிகாரமாக[4] தெரிந்து கொண்டான்.

1. ஆதி. 1 : 31
2. ஆதி. 3 : 31, யோ. 8 : 44, 1 தீமோ. 2 : 13-14
3. ஆதி. 3 : 6
4. ரோ. 5 : 12, 18, 19

**10. வினா : தேவன் அந்த கீழ்படியாமையையும், சமய எதிர்ப்பு கோட்பாட்டையும் தண்டிக்காமல் விடுவாரா?**

விடை : கண்டிப்பாக இல்லை.

அவர் நம்முடைய பாவ சுபாவத்தினாலும் பாவச் செயலாலும் பயங்கர கோபத்திற்குள்ளானார். எனவே நீதியுள்ள நியாயத் தீர்ப்பினால் அவர் இப்போதும் நித்திய காலமாகவும்[1] தண்டிப்பார் என்று இவ்விதமாக கூறப் பட்டுள்ளது.[2]

நியாயப் பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள். நியாயப் பிரமாண புத்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய்யத் தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன். (கலா. 3 : 10)

1. யாத் 34:7, சங். 5 : 4-6, 7:10 நாகூம் 1 : 2, ரோ. 1 : 18, 5 : 12, எபே. 5 : 6, எபி. 9 : 27.
2. உபா. 27 : 26

## 11. வினா : தேவன் கருணை உடையவர்தானா?

விடை : உண்மையாகவே தேவன் கருணையுள்ளவர்.[1] ஆனால் அவர் நீதிபரரும் கூட[2] தேவனின் நீதி என்பது சர்வ வல்லமையுள்ளது. உன்னதமான தேவனுக்கு விரோதமாக செய்யப்படும் எல்லா பாவங்களையும் கடுமையாக தண்டிக்கக்கூடியது. அதாவது சரீரத்திற்கும் ஆத்துமாவுக்கும் நித்திய தண்டனையை அளிப்பது.[3]

1. யாத். 20 : 6, 34 : 6-7, சங். 103 : 8-9
2. யாத். 20 : 5, 34 : 7, உபா. 7: 9-11, சங். 5 : 4-6 எபி. 10 : 30-31
3. மத். 25 : 45-46

பாகம் இரண்டு

# நம்முடைய மீட்பு

## கர்த்தருடைய நாள் 5

**12. வினா : தேவனுடைய நேர்மையான நியாயத் தீர்ப்பினால் இம்மையிலும் மறுமையிலும் தண்டிக்கப்பட வேண்டிய நாம் எவ்வாறு இந்த தண்டனையிலிருந்து தப்பி மறுமுறையும் அவருடைய தயவை பெற முடியும்?**

விடை : தேவன் தன்னுடைய நீதி பரிபூரணப்பட எதிர்பார்க்கிறார்.[1] எனவே நாம் இதற்காக கிரயத்தை நாமாகவோ அல்லது மற்றொருவர் மூலமோ செலுத்தியாக வேண்டும்.[2]

---

1. யாத் 20 : 5, 23 : 7, ரோ. 2 : 1-11
2. ஏசா. 53 : 11, ரோ. 8 : 3, 4

**13. வினா : நாமே இந்த கிரயத்தை செலுத்த முடியுமா?**

விடை : நிச்சயமாக முடியாது. மாறாக அனுதினமும் நம்முடைய கடனே அதிகரிக்கிறது.[1]

---

1. சங். 130 : 3, மத். 6 : 12, ரோ. 2 : 4-5

**14. வினா : அல்லது படைக்கப்பட்ட ஏதேனும் கிரயம் செலுத்த முடியுமா?**

விடை : முடியாது.

முதலாவதாக மனிதன் செய்த பாவத்திற்கு மற்ற படைப்புகளை தேவன் தண்டிக்க மாட்டார்.[1] மேலும், எந்த படைப்பும் தேவன் பாவத்திற்கு எதிராக கொண்டுள்ள நித்திய கோபாக்கினையிலிருந்து மற்றவைகளை மீட்க முடியாது.[2]

1. எ.சே 1 : 8, 4 : 20. எபி. 2 : 14-18
2. சங். 130 : 3, நாகூம் 1 : 6

**15. வினா : எந்தவிதமான மத்தியஸ்தரை அல்லது விடுவிப்பவரை நாம் நாடவேண்டும்?**

விடை : யாரொருவர் உண்மையும்[1] நேர்மையும்[2] உள்ளவரோ, அவரே எல்லா படைப்புகளை விட அதிக பலம் உள்ளவர் அதாவது யார் உண்மையான தேவனாயிருக்கிறாரோ அவரை நாம் நாட வேண்டும்.[2]

1. 1 கொ. 15 : 21, எபி. 2 : 17.
2. ஏசா. 53 : 9.2 கொ 5 : 21, எபி. 7 : 26
3. ஏசா. 7 : 14. 9 : 6 எரே. 23 : 6, யோ. 1 : 1, ரோ. 8 : 3-4

# கர்த்தருடைய நாள் 6

**16. வினா : அவர் ஏன் உண்மையும் நேர்மையுமுள்ள மனிதனாக இருக்க வேண்டும்?**

விடை : அவர் உண்மையான மனிதனாக இருக்க வேண்டும். தேவ நீதியானது பாவம் செய்த மனிதனை மீட்க அதே மனித சாயலுடையவரே பரிகாரம் செலுத்த வேண்டும் என்றுள்ளது.[1] ஏனென்றால் ஒரு பாவியே மற்ற பாவிக்கான பரிகாரத்தை செலுத்த முடியாது.[2]

---

1. ரோ. 5 : 12, 15. 1 கொ. 15 : 21. எபி 2 : 14-16
2. எபி 7 : 26-27 1 பே 3 : 18

**17. வினா : ஏன் அதே வேளையில் அவர் உண்மையான தேவனாக இருக்க வேண்டும்?**

விடை : அவர் உண்மையான தேவனாக இருக்க வேண்டும். ஏனென்றால் அவருடைய தெய்வ தன்மையின் திறன் கொண்டு.[1] தேவனுடைய கோபாக்கினையை[2] உண்மை யான மனிதீகத்தோடு தன் மேல் ஏற்று, நமக்கு வாழ்வை யும் நேர்மையையும்[3] மீட்டுத்தர முடியும்.

---

1. ஏசா. 9 : 5
2. உபா. 4 : 24, நாகூம் 1 : 16, சங். 130 : 3.
3. ஏசா. 53 : 5, 11, யோ 3 : 16, 2 கொ. 5 : 21

# கர்த்தருடைய நாள் 7

**18. வினா : யார் அந்த மத்தியஸ்தனும், தேவனும் அதேவேளையில் உண்மையும், நேர்மையுமான மனிதர்?**

விடை : நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தேவனால் நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும் மீட்புமானார். (1 கொரி, 1 : 3)

1. மத். 1 : 21-23, லூக 2 : 11, 1 தீமோ. 2 : 5, 3 : 16.

**19. வினா : இதை நீ எங்கிருந்து தெரிந்து கொண்டாய்?**

விடை : பரிசுத்த சுவிசேஷங்களில் இருந்து தேவன் இதை முதலில் பரலோகத்தில் வெளிப்படுத்தினார்[1]. பின்பு முற்பிதாக் களின் மூலமும் தீர்க்கதரிசிகள்[3] மூலமாகவும் இதை அறிவித்தார். அதன் பின்பு பலியின் மூலமாகவும் மற்ற சட்டச் சடங்குகள்[4] மூலமாகவும் இதை முன் குறிப் பிட்டார். இறுதியாக தன்னுடைய ஒரே குமாரன் மூலமாக இதை நிறைவேற்றினார்[5].

1. ஆதி. 3 : 5
2. ஆதி 12 : 3, 22 : 18, 49 : 10
3. ஏசா, 53, எரே 23 : 5-6, மீகா 7 : 18-20, அப். 10 : 43, எபி. 1 : 1
4. லேவி. 1 : 7, யோ, 5 : 46, எபி. 10 : 1-10
5. ரோ. 10 : 4, கலா, 4 : 4-5 கொலோ. 2 : 17

**20. வினா : அப்படியென்றால் ஆதாம் மூலமாக அழிந்துபோன மனிதர் யாவரும், கிறிஸ்துவால் இரட்சிக்கப்படுவார்களா?**

விடை : இல்லை.

யாரொருவர் மெய் விசுவாசத்தோடு கிறிஸ்துவோடு ஒன்றானார்களோ அவர்களே அவரால் இரட்சிக்கப்பட்டு அவருடைய எல்லா அனுகூலங்களையும் அடைகிறார்[1].

1. லத் 7 : 14, யோ. 1 : 12, 3 : 16, 18, 36, ரோ. 11 : 16-21.

**21. வினா : மெய் விசுவாசம் என்றால் என்ன?**

விடை : தேவன் தம்மை அவருடைய வேதத்தின் மூலம் நமக்கு வெளிப்படுத்தினார்[1] என்ற உண்மையை நான் ஏற்றுக் கொள்ளும் அறிவே மெய் விசுவாசம் ஆகும்.

மேலும் மற்றவர்களுக்கு மட்டுமல்ல எனக்கும்[2] தேவன் பாவ மன்னிப்பையும், நித்தியமான பரிசுத்தத்தையும், இரட்சிப்பையும்[3] கிறிஸ்துவின் கிரயத்தால்[4] மட்டுமே கிருபையாக அருளினார் என்ற பற்றுறுதியுமே விசுவாசம் ஆகும்[5]. இந்த விசுவாசமானது பரிசுத்த ஆவியானவர் சுவிசேஷத்தின் மூலம் என் இருதயத்திலே கிரியை செய்வதால் உண்டாகிறது.[6]

1. யோ. 17 : 3, 17, எபி. 11 : 1-3, யாக் 2 : 19
2. கலா. 2 : 20
3. ரோ. 1 : 17, எபி, 10 : 10
4. ரோ. 3 : 20-26, கலா. 2 : 16, எபே. 8-10
5. ரோ. 4 : 18-21, 5 : 1, 10 : 10, எபி. 4 : 16
6. அப். 16 : 14 ரோ. 1 : 16, 10 : 17, 1கொ. 1 : 21.

**22. வினா : அப்படியென்றால் கிறிஸ்தவன் விசுவாசிக்க வேண்டியது என்ன?**

விடை: சுவிசேஷ புத்தகங்களில் வாக்குத்தங்களாக[1] கொடுக்கப் பட்டவற்றை நமது கிறிஸ்தவ விசுவாச பிரமாணத்தில் சந்தேகமில்லாமல் சுருக்கமாக கூறப்பட்டுள்ளது எதுவோ அதையே விசுவாசிக்க வேண்டும்.

1. மத். 28 : 19, யோ. 20 : 30-31

23. வினா : இந்த விசுவாசப் பிரமாணம் எது?

விடை : பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த சர்வவல்ல பிதாவாகிய கடவுளை விசுவாசிக்கிறேன். அவருடைய ஒரே குமாரனும் நம்முடைய ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். இவர் பரிசுத்த ஆவியினால் கர்ப்பந்தரித்து உற்பவித்து கன்னி மரியாளிடத்தில் பிறந்தார். பொந்தியுபிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு சிலுவையில் அறையுண்டு மரித்து அடக்கம் பண்ணப்பட்டு பாதாளத்தில் இறங்கினார். மூன்றாம் நாள் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார். பரத்துக்கேறி பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருகிறார்.

பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன். பொதுவான பரிசுத்த கிறிஸ்தவ சபையும் பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும் பாவமன்னிப்பும் சரீர உயிர்த்தெழுதலும் நித்திய ஜீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன்.

# கர்த்தருடைய நாள் 8

**24. வினா : இந்த பிரமாணங்கள் எப்படி பிரிக்கப்பட்டுள்ளது?**

விடை : மூன்று பாகங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

முதல் பாகம் : தந்தையாகிய தேவனைப் பற்றியும், படைப்பைப் பற்றியும்.

இரண்டாகம் பாகம் : குமாரனாகிய தேவனைப் பற்றியும், இரட்சிப்பைப் பற்றியும்.

மூன்றாவது பாகம் : பரிசுத்த ஆவியாகிய தேவனைப் பற்றியும் பரிசுத்தமாகுதல் பற்றியும்.

**25. வினா : தேவன் ஒருவராய் இருக்கும்போது[1] நீ ஏன் தந்தை குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் என்று மூன்று நபர்களாக பிரித்துப் பேசுகிறாய்?**

விடை: ஏனென்றால் தேவன் இந்த மூன்று தனித்துவமுடைய நபர்களை ஒரே உண்மையான நித்திய தேவனாக தம்மை அவருடைய வேதத்தில் வெளிப்படுத்தியுள்ளார்.

1. உபா 6 : 4, ஏசா 44 : 6, 45 : 5, 1 கொ. 8 : 4, 6
2. ஆதி 1 : 2-3, ஏசா 61 : 1, 63 : 8-10, மத். 3 : 16-17, 28 : 18-19, லூக் 4 : 18, யோ. 14 : 26, 15 : 26, 2 கொ. 13 : 14, கலா, 4 : 6, தீத்து 3 : 5-6

## தந்தையாகிய தேவனும் நம்மை படைத்தலும்

## கர்த்தருடைய நாள் 9

26. வினா : **வானத்தையும், பூமியையும் படைத்த சர்வ வல்ல பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன் என்று கூறும்போது நீ நம்புவது என்ன?**

விடை: நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நித்திய தந்தையானவர் வானத்தையும் பூமியையும் அதில் உள்ள அனைத்தையும் வெறுமையிலிருந்து உண்டாக்கினார்[1]. மேலும், என்னுடைய தேவனும் என் தந்தையுமானவர்[2]. தம்முடைய நித்திய ஆலோசனையாலும் இறையருளாலும்[3] அவருடைய குமாரனாகிய கிறிஸ்துவுக்காக, தம்முடைய படைப்பை ஆதரித்து ஆட்சிபுரிகிறார். என்னுடைய சரீரத்திற்கும் ஆத்துமாவுக்கும்[4] தேவையான எல்லாவற்றையும் அவர் தருவார் என்றும் என்னுடைய எல்லா தீமையான வாழ்வின் வேதனைகளையும்[5] அவர் நன்மையாக மாற்றுவார் என்ற பற்றுறுதி எவ்வளவு ஐயப்பாடும் இன்றி எனக்குண்டு. சர்வ வல்ல தேவனுக்கு[6] இதைச் செய்யத் திறன் இருப்பது போலவே உண்மையான தந்தையாக[7] இதைச் செய்ய ஆர்வமும் அவருக்கு உண்டு என்று நம்புகிறேன்.

1. சங். 104 : 27-30, மத். 6 : 30, 10 : 29, எபே. 1 : 11
2. ஆதி. 1, 2 யாத். 20 : 11, யோவு 38, 39, சங். 33 : 6, ஏசா. 44 : 24, அப். 24 : 14, 15.
3. யோ. 1 : 12-13, ரோ. 8 : 15-16, கலா. 4 : 4-7, எபே. 1 : 5
4. சங். 55 : 22, மத். 6 : 25-26, லூக். 12, 22-31
5. ரோ. 8 : 28
6. ஆதி. 18 : 14, ரோ. 8 : 31-39
7. மத். 6 :32-33, 7 : 9-11

# கர்த்தருடைய நாள் 10

**27. வினா : தேவ வல்லமையைக் குறித்து நீ அறிந்திருப்பது என்ன?**

விடை தேவ வல்லமை என்பது அவருடைய சர்வ வல்லமையாலும் எங்கும் பிரசன்னமாயிருக்கும் தன்மையாலும்[1] தம் கரம் கொண்டு வானத்தையும் பூமியையும் அதில் உள்ள எல்லா படைப்பையும்[2] எல்லா காலகட்டத்திலும் சூழ்நிலையிலும் அரவணைத்து ஆளுகை செய்கிறார். எனவே,

வெயிலோ மழையோ
வறட்சியோ கனிவளமோ
தண்ணீரோ ஆகாரமோ
வியாதியோ சுகமோ
வறுமையோ வளம்கொழிப்போ[3]

இவையாவும் நம்முடைய தந்தையிடமிருந்து வருவதே அன்றி வெறொன்றும் அல்ல[5].

1. எரே. 23 : 24 அப் 17 : 24-28.
2. எபி. 1 : 3
3. எரே. 5 : 24. அப். 14 : 15-17. யோ 9 : 3. நீதி. 22 : 2
4. நீதி. 16 : 33
5. மத். 10 : 29

**28. வினா : தன்னுடைய வல்லமையால் தேவன் எல்லாவற்றையும் இப்போதும் கூட அரவணைக்கிறார் என்ற செய்தியால் நமக்கு உண்டாகும் அனுகூலம் என்ன?**

விடை : தீமையிலே பொறுமையாக இருக்கவும்[1] வருங்காலத்திலே தேவனுடைய அன்பை விட்டு நம்மை எந்த சிருஷ்டியும் பிரிக்க முடியாது என்ற உறுதியான நம்பிக்கை நம் தேவனாகிய தந்தை மீது வைக்கவும்[3] அவருடைய கரத்தில் எல்லா சிருஷ்டியும் முழுமையாய் இருப்பதால் அவர் சித்தமின்றி ஓர் அணுவும் அசையாது என்ற நம்பிக்கையாகிய அனுகூலங்கள் உண்டு.[4]

1. யோ. 1 : 21-22. சங். 39 : 10. யாக். 1 : 3.
2. உபா. 8 : 10, 1 தெச. 5 : 18
3. சங். 55 : 22, ரோ. 5 : 3-5, 8 : 38-39
4. யோபு 1 : 12, 2 : 6, நீதி. 21 : 1, அப். 17 : 24-28

## குமாரனுமாகிய தேவனும் நம்மை மீட்டலும்

## கர்த்தருடைய நாள் 11

**29. வினா : ஏன் இயேசு தேவகுமாரன் என்றழைக்கப்பட்டார்? அதாவது இரட்சகர் என்று.**

விடை: ஏனென்றால் அவர் நம்முடைய[1] பாவத்திலிருந்து இரட்சித் தார். இந்த இரட்சிப்பை அவரிடமேயன்றி வேறெங்கும் தேடி காண முடியாது[2],

1. மத். 1 : 21, எபி. 7 : 25
2. ஏசா. 43 : 11, யோ. 15 : 4-5, அப். 4 : 11-12, 1 தீமோ 2 : 5

**30. வினா : இரட்சிப்பை தங்களிடமோ அல்லது அருள் தொண் டரிடமோ அல்லது வேறு எந்த புண்ணியவானிடமோ நாடி தேடுவோர், இயேசுவை தங்களின் சொந்த இரட்சகராக விசுவாசிக்க முடியுமா?**

விடை : முடியாது.

அவர்கள் தங்களின் உதடுகளால் அவரை துதித்தாலும் இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள்[1]. இதில் இரண்டில் ஒன்று உண்மையாக இருக்கலாம்.

ஒன்று : இயேசு ஒரு முழுமையான இரட்சகராய் இல்லாமல் இருக்கலாம்.

அல்லது : இயேசுவை தங்களுடைய உண்மையான இரட்சகராக விசுவாசத்தோடு ஏற்றுக்கொண்டவர்கள கண்டிப்பாக தங்கள் இரட்சிப்புக்காக எல்லாவற்றையும் அவரிடத்தில் கண்டு கொள்வார்கள்.[2]

1. 1 கொ 1 : 12-13, கலா 5 : 4
2. கொலோ. 1 : 19-20, 2 : 10, 1 யோ. 1 : 7.

# கர்த்தருடைய நாள் 12

**31. வினா : அவர் ஏன் கிறிஸ்து என்று அழைக்கப்பட்டார்? அதாவது அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று.**

விடை: தந்தையாகிய தேவனானவர் பரிசுத்த ஆவியானவரின் மூலம் கிறிஸ்துவை நம்முடைய பிரதான தீர்க்கதரிசி யாகவும்[1], ஆசாரியானாகவும் அபிஷேகித்தார்[2]. இந்த இயேசுவானவர் நம்முடைய மீட்பை குறித்தான மறை பொருளையும் தேவசித்தத்தையும் நமக்கு வெளிப்படுத் தினார்[3]. நம்முடைய ஒரே பிரதான ஆசாரியனும் அவரே[4]. அவர் நம்முடைய சரீரத்தை பலியாக கொடுத்து நம்மை மீட்டதுமல்லாமல்[5] நமக்காக பிதாவினிடத்தில் தொடர்ந்து மன்றாடுகிறார்[5]. அவர் நம்முடைய நித்திய இராஜா[7]. எனவே தம்முடைய வார்த்தையாலும் ஆவியாலும் நம்மை ஆண்டு நமக்கு பெற்றுத் தந்த மீட்பை பாதுகாத்து காக்கிறார்[8].

1. உபா. 18 : 15 (அப். 3 : 22)
2. சங். 45 : 7 (எபி. 1 : 9). ஏசா. 61 : 11 (லூக் 4 : 18) லூக் 3 : 21-22
3. யோ. 1 : 18, 15 : 15
4. சங் 110 : 4 (எபி. 7 : 17)
5. எபி. 9 : 12, 10 : 11-14
6. ரோ. 8 : 34, எபி. 9 : 24, 1 யோ. 2 : 1
7. சகரி. 9 : 9 (மத் 21 : 5), லூக். 1 : 33
8. மத் 28 : 18-20, யோ. 10 : 28, வெளி. 12 : 10-11

**32. வினா : ஏன் நீ கிறிஸ்தவன் என்றழைக்கப்படுகிறாய்?**

விடை : ஏனென்றால், நான் விசுவாசத்தால் கிறிஸ்துவில் அங்கமானேன்[1]. எனவே அவருடைய அபிஷேகத்தில் நானும் பங்கு பெறுகிறேன்[2]. எனவே நான் ஒரு தீர்க்கதரிசியாகிய அவருடைய பெயரை அறிக்கையிடுகிறேன்[3]. அசாரியனாக என்னை அவருக்கு நன்றியுள்ள ஜீவபலியாக அர்ப்பணிக்கிறேன்[4]. இராஜாவாக விடுதலையோடு நல்ல தெளிந்த சிந்தையோடு பாவத்திற்கும் சாத்தானுக்கும் எதிராக இந்த வாழ்வில் போராடுவேன்[5]. அவரோடு நித்திய காலமாக சகல சிருஷ்டியின் மேலும் ஆட்சி செய்வேன்[6].

1. 1 கொ. 12 : 12-27
2. யோவேல் 2 : 28, (அப். 2 : 17) 1 யோ 2 : 27
3. மத். 10 : 32, ரோ. 10 : 9, 10, எபி. 13 : 15
4. ரோ. 12 : 1, 1 பே. 2 : 5, 9.
5. கலா. 5 : 16-17, எபே. 6 : 11, 1 தீமோ. 1 : 18-19
6. மத். 25 : 34, 2 தீமோ. 2 : 12

# கர்த்தருடைய நாள் 13

**33. வினா : நானும் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கும்போது ஏன் அவர் ஒருவரே தேவனின் ஒரே பேரான குமாரன் என்றழைக்கப்பட்டார்?**

விடை : ஏனென்றால் கிறிஸ்து மட்டுமே நித்திய காலமாக தேவனுடைய சொந்த குமாரன்[1], ஆனால் நாம் கிறிஸ்துவுக்காக கிருபையினாலே புத்திர சுவிகாரத்தின் மூலம் தேவனுடைய பிள்ளைகளானோம்[2].

1. யோ. 1 : 1-3, 14, 18, 3 : 16, ரோ. 8 : 32 எபி 1 : 1, யோ. 4 : 9
2. யோ. 1 : 12, ரோ. 8 : 14-17, கலா. 4 : 6, எபே. 1 : 5-6

**34. வினா : ஏன் அவரை நம்முடைய கர்த்தர் என்று அழைக்கிறோம்?**

விடை : அவர் பொன் வெள்ளியால் அல்லாமல்[1] தம்முடைய சொந்த விலை மதிப்பற்ற இரத்தத்தை கிரயமாக செலுத்தி நம்முடைய சரீரத்தையும் ஆத்துமாவையும் நம்முடைய எல்லா பாவத்திலிருந்து மீட்டெடுத்தார்[2].

மேலும் நம்மை எல்லாவித பிசாசின் சக்தியிலிருந்து விடுவித்து நம்மை அவருடைய சொந்த பொக்கிசமாக்கினார்[3].

1. 1 பே. 1 : 18-19
2. 1 கொ. 6 : 20, 1 தீமோ. 2 : 5-6
3. கொலோ. 1 : 13-14, எபி. 2 : 14-15

## கர்த்தருடைய நாள் 14

**35. வினா : அவர் பரிசுத்த ஆவியால் கர்ப்பம் தரித்து கன்னி மரியாளின் கற்பிலே பிறந்தார் என்று சொல்லும்போது நீ அறிக்கையிடுவது என்ன?**

விடை : இவர் நித்திய தேவகுமாரன்[1]. மேலும் நித்திய காலமாக உண்மையான தேவனாக[2] இருந்தபோதிலும் பரிசுத்த ஆவியானவரின் செயல் மூலமாக[3] தானே தன் மீது உண்மையான மனுதீகத்தை ஏற்று கன்னி மரியாளின் மாமிசத்திலும் இரத்தத்திலும் பிறந்தார். எனவே இவர் தாவீதின் உண்மையான வித்தாவார்[4] தன் சகோதர்கள் போலவே எல்லாவிதத்தில்[5] இருந்தாலும் பாவமறியாதவர்[6].

1. யோ. 1 : 1, 10 : 30-36, ரோ. 1 : 3, 9 : 15, கொலோ. 1 : 15-17, 1 யோ. 5 : 20
2. லூக். 1 : 35
3. மத். 1 : 18-23, யோ. 1 : 14, கலா, 4 : 4, எபி. 2 : 14
4. 2 சாமு 7 : 12-16, சங், 132 : 11, மத். 1 : 1, லூக் 1 : 32, ரோ. 1 : 3
5. பிலி. 2 : 7, எபி 2 : 17
6. எபி. 4 : 15, 7 : 26-27

**36. வினா : இந்த பரிசுத்தமான கர்ப்பத்தாலும் கிறிஸ்துவின் பிறப்பாலும் நீ பெறும் அனுகூலங்கள் என்ன?**

விடை : அவர் நம்முடைய மத்தியஸ்தர்[1]. எனவே, நான் கர்ப்பந் தரித்து பிறந்த என்னுடைய பாவத்தை[2] தன்னுடைய மாசற்ற தன்மையாலும், பரிபூரண பரிசுத்தத்தாலும் தேவனுடைய கண்ணில் இருந்து புறம்பாக்குகிறார்.

1. 1 தீமோ. 2 : 5-6, எபி. 9 : 13-15
2. ரோ. 8 : 3-4, 2 கொ. 5 : 21, கலா. 4 : 45, 1. பே 1 : 18-19.

# கர்த்தருடைய நாள் 15

**37. வினா : அவர் பாடனுபவித்தார் என்று கூறும்போது நீ அறிக்கையிடுவது என்ன?**

விடை: அவர் உலகில் வாழ்ந்த காலத்தில் முக்கியமாக கடைசி நாட்களில் மனித இனத்தின்[1] பாவத்திற்கெதிரான தேவ கோபாக்கினையை கிறிஸ்து தன்னுடைய சரீரத்திலும், ஆத்துமாவிலும் ஏற்றுக் கொண்டார்.

அப்படியே அவருடைய பாடாகிய ஒரே தரம் பலியிடப் பட்ட[2] பலியால் நம்முடைய சரீரத்தையும் ஆத்துமா வையும் நித்திய அழிவிலிருந்து மீட்டார்[3]. மேலும் நமக்காக தேவ கிருபையையும், நீதியையும், நித்திய வாழ்வையும் பெற்றுத்தந்தார்[4].

1. ஏசா. 53, 1 திமோ. 2 : 6, 1 பே 2 : 24, 3 : 18
2. ரோ. 3 : 25, 1 கொ. 5 : 7, எபே. 5 : 2, எபி. 10 : 14, 1 யோ. 2 : 2, 4 : 10
3. ரோ. 8 : 1-4 கலா 3 : 13, கொலோ 1 : 13, எபி. 9 : 12, 1 பே. 1 : 18, 19.
4. யோ. 3 : 16, ரோ. 3 : 24-26, 2 கொ. 5 : 21, எபி. 9 : 15.

**38. வினா : ஏன் அவர் நீதிபதி பொந்தியுபிலாத்துவினிடம் துன்புற வேண்டும்?**

விடை : கிறிஸ்து மாசற்றவராய் இருந்தபோதும், உலக நீதிபதி[1] அவருக்கு எதிரான தீர்ப்பு வழங்கினான். எனவே நம் மேல் விழவேண்டிய தேவ நியாயத் தீர்ப்பிலிருந்து அவர் நம்மை விடுவித்தார்[2].

1. லூக். 23 : 13-24, யோ. 19 : 4, 12 : 16
2. ஏசா. 53 : 4-5, 2 கொ. 5 : 21, கலா. 3 : 13.

39. **வினா : கிறிஸ்துவானவர் வேறு முறையில் அல்லாமல் சிலுவையில் அறையப்பட்டு மரித்ததற்கு ஏதேனும் தனிச்சிறப்பு உண்டா?**

விடை : உண்டு. சிலுவையில் அறையப்பட்டவர்கள் தேவனால் சபிக்கப்பட்டவர்கள் கிறிஸ்து சிலுவையில் அறையப் பட்டதால் நம் மேல் வரவேண்டிய தேவ சாபத்தை தான் ஏற்றுக்கொண்டார்[1].

1. உபா. 21 : 23, கலா. 3 : 13

## கர்த்தருடைய நாள் 16

**40. வினா : ஏன் கிறிஸ்து சிலுவையின் பரியந்தம் தன்னைத்தானே தாழ்த்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது?**

விடை : ஏனென்றால் நம்முடைய பாவத்திற்கு பரிகாரமாக தேவ குமாரன் மரிக்க வேண்டியதே அன்றி வேறு மார்க்கம் தேவனுடைய உண்மைக்கும் நீதிக்கும்[1] பொருத்தமாக வில்லை[2].

---

1. ஆதி. 2 : 17
2. ரோ. 8 : 3, பிலி. 2 : 8, எபி. 2 : 9, 14, 15.

**41. வினா : ஏன் அவர் அடக்கம் பண்ணப்பட்டார்?**

விடை : அவரை அடக்கம் செய்ததால் அவருடைய மரணம் உண்மை என்று நிரூபிக்கப்படுகிறது[1].

---

1. ஏசா. 53 : 9, யோ. 19 : 38-42, அப். 13 : 29. 1 கொ. 15 : 3-4

**42. வினா : கிறிஸ்து நமக்காக மரித்ததாலே நாமும் ஏன் மரிக்க வேண்டும்?**

விடை : நம்முடைய மரணம் பாவத்திற்கு பரிகாரமாவதில்லை. அது பாவத்திற்கு முடிவும் நித்திய வாழ்வுக்கு எத்தனு மாகிறது[1].

---

1. யோ. 5 : 24, பிலி. 1 : 21-23, தெச. 5 : 9-10.

**43. வினா : கிறிஸ்துவின் பலியாலும் அவருடைய சிலுவை மரணத்தாலும் நாம் பெறும் அனுகூலங்கள் என்ன?**

விடை : கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் நம்முடைய பழைய சுபாவமும் சிலுவையில் அறையப்பட்டு மரித்து அவருடனே கூட அடக்கம் பண்ணப்பட்டது[1]. எனவே நம்முடைய சரீர தீய இச்சைகள் இனி நம்மை ஆட்கொள்வதில்லை[2]. மேலும், நாம், நம்மை அவருக்கு ஒரு நன்றி உள்ள பலியாக அர்ப்பணிக்க உதவுகிறது[3].

1. ரோ. 6 : 5-11, கொலோ 2 : 11-12
2. ரோ. 6 : 12-14
3. ரோ. 12 : 1, எபே. 5 : 1-2

**44. வினா : அவர் பாதாளத்திற்கு இறங்கினார் என்று ஏன் சேர்க்கப்பட்டுள்ளது?**

விடை : கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தான் மனிதனாக வாழ்ந்த காலத்தில் சொல்லி முடியாத கடுந்துயரம், சரீர வேதனை பெரும் அச்சம்[1] தரும் சூழ்நிலை மற்றும் மனவேதனை போன்ற கஷ்டங்களை சகித்துக்கொண்டார் என்பதும் மேலும் சிலுவையில் கடுந்துயரத்திலிருந்தும், நரக வேதனையிலிருந்தும் என்னை விடுவித்தார் என்பது என்னுடைய பெரிய கவலையிலும் சோதனையிலும் எனக்கு மன உறுதியையும் ஆறுதலையும் அளிக்கிறது.[2]

1. சங். 18 : 5-6, 116 : 3, மத். 26 : 36, 46, எபி. 5 : 7-10
2. ஏசா. 53

# கர்த்தருடைய நாள் 17

**45. வினா : எப்படி கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நமக்கு சொந்தமாகிறது?**

விடை : முதலாவதாக, அவர் தன்னுடைய உயிர்த்தெழுதலின் மூலம் மரணத்தை ஜெயங்கொண்டார். தன்னுடைய மரணத்தின் மூலம் தான் பெற்ற நீதியிலே நம்மையும் பங்குதாரராக்கினார்[1].

இரண்டாவதாக, அவருடைய பலத்தினாலே நாமும் புதிய வாழ்வுக்காக உயிர்ப்பிக்கப்பட்டுள்ளோம்[2].

மூன்றாவதாக, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நம்முடைய மகிமையான உயிர்த்தெழுதலுக்கு நிச்சயமான வாக்குறுதியாகிறது[3].

1. ரோ. 4 : 25, 1 கொ. 15 : 16-20, 1 பே. 1 : 3-5
2. ரோ. 6 : 5-11, எபே. 2 : 4-6, கொலோ. 3 : 1-4
3. ரோ. 8 : 11, 1 கொ. 15 : 12-23, பிலி. 3 : 20-21.

## கர்த்தருடைய நாள் 18

**46. வினா : அவர் பரலோகத்திற்கு ஏறினார் என்று சொல்லும்போது நாம் அறிக்கையிடுவது என்ன?**

விடை : கிறிஸ்துவானவர் தம்முடைய சீஷர்களின் கண்களுக்கு முன்பாக பூமியில் இருந்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்[1] என்றும் மறுபடியும் அவர் உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க[2] வரும் வரை நமக்கு அங்கு அனுகூலமாக இருக்கிறார்.[3]

1. மத். 16 : 19, லூக் 24 : 50-51, அப். 1 : 9-11
2. மத். 24 : 30, அப். 1 : 11.
3. ரோ. 8 : 34, எபி. 4 : 14, 7 : 23-25, 9 : 24

**47. வினா : அப்படியென்றால், உலகத்தின் முடிவு பரியந்தம் நம்முடனே இருப்பதாக வாக்குத்ததம் செய்தவர் நம்முடன் இல்லையா?[1]**

விடை : கிறிஸ்துவானவர் முழுமையான மனிதனும் முழுமையான தேவனுமாவார்.[1] மனிதீகத்திலே அவர் உலகத்தில் இல்லை[2]. ஆனால் தெய்வீகத்திலும், மாட்சிமையிலும், கிருபையிலும், ஆவியிலும் நம்மை விட்டு ஒருபோதும் பிரிந்து இருந்ததில்லை[3].

1. மத். 28 : 20
2. மத். 26 : 11, யோ. 16 : 28, 17 : 11, அப். 3 : 19-21, எபி. 8 : 43
3. மத். 28 : 18-20, யோ. 14 : 16-19, 16 : 13

**48. வினா : அவர் தெய்வீகத்தில் இருக்கும்போது மனிதீகம் அவரிடத்தில் காணப்படவில்லையென்றால், கிறிஸ்துவில் இரண்டு சுபாவங்களும் பிரிக்கப்பட மாட்டாதவை தானா?**

விடை : இல்லை.

அவருடைய தெய்வீகத்திற்கு எல்லை இல்லை. அவர் எங்கும் வியாபித்திருக்கிறார்.[1] எனவே, அவருடைய தெய்வீகம், அவர் தாமே எடுத்துக்கொண்ட மனிதீகத்திற்கு அப்பாற்பட்டது. ஆனால் அவர் மனிதீகத்தில், இவை இரண்டு தனித்துவம் உள்ள சுபாவங்களும் இணைக்கப்பட்டுள்ளது.[2]

---

1. எரே. 23 : 23-24, அப். 7 : 48-49
2. யோ. 1 : 14, 3 : 13, கொலே. 2 : 9

**49. வினா : கிறிஸ்து பரலோகத்திற்கு ஏறியது நமக்கு எவ்வகையில் அனுகூலமாகிறது?**

விடை : முதலாவதாக, அவர், பரலோகத்தில் நம்முடைய பிதாவின் முன்பு நமக்காக வழக்காடும் வழக்கறிஞர்.[1]

இரண்டாவதாக, வாக்குத்தத்தம் செய்ததுபோலவே அவர் நம்முடைய தலையானவர். நம்மை, அவருடையவர்களை தம்மிடம் எடுத்துக்கொள்ளும் பொருட்டு நமக்காக பரலோகத்தில் நம்முடைய சரீரமாக இருக்கிறார்[2].

மூன்றாவதாக, இந்த பூலோகத்திற்கான காரியங்கள் அல்ல[3]. கிறிஸ்துவானவர் தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் பரலோகத்தின் காரியங்களை நாம் தேட பெலன் அளிக்கும் பரிசுத்த ஆவியானவரை நமக்கு அவர் வாக்குத் தத்தமாக அனுப்பி இருக்கிறார்[4].

---

1. ரோ. 8 : 34, 1 யோ 2 : 1
2. யோ. 14 : 2, 17 : 24, எபே. 2 : 4-6
3. கொலோ. 3 : 1-4
4. யோ. 14 : 16, அப். 2 : 33, 1 கொ. 1 21, 22, 5 : 5.

## 19 கர்த்தருடைய நாள்

**50. வினா : தேவனுடைய வலது பாரிசத்தில் அமர்ந்துள்ளார் என்று ஏன் சேர்க்கப்பட்டுள்ளது?**

விடை : பிதாவானவர் யார் மூலம் எல்லாவற்றையும் ஆள்கிறாரோ[1] அந்த கிறிஸ்துவானவர் தன்னுடைய திருச்சபையின் தலையாக[2] தன்னை மகிமைப்படுத்திக் கொள்ள பரலோகத்திற்கு ஏறினார்.

1. மத். 28 : 18, யோ. 5 : 22-23
2. எபே. 20-23, கொலோ. 1 : 18.

**51. வினா : எப்படி நம்முடைய தலைமை என்ற கிற்ஸ்துவின் மகிமை நமக்கு அனுகூலமாகிறது?**

விடை : முதலாவதாக, அவருடையவர்களாகிய நம்மீது அவர் தம்முடைய பரிசுத்த ஆவியானவரின் மூலமாக பரலோக பலன்களை பொழிகிறார்.[1]

இரண்டாவதாக, அவர் தம்முடைய மகத்துவத்தால் நம்மை எல்லா சத்துருக்களிடமிருந்தும் காத்து காப்பாற்றுகிறார்[2].

1. அப். 2 : 33, எபே. 4 : 7-12
2. சங். 2 : 9, 110 : 1-2 யோ. 10 : 27-30. வெளி. 19 : 11-16

**52. வினா : கிறிஸ்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந் தீர்க்க வருகிறார் என்பதால் உண்டாகும் மன நிறைவு யாது?**

விடை : என்னுடைய எல்லா கவலையிலும் வேதனையிலும் எனக்காக தன்னை தேவனுடைய நியாயத் தீர்ப்புக்கு முழுமையாக ஒப்புக் கொடுத்து நீக்கிப் போட்ட பரலோகத்தின் நியாயதிபதியை நோக்கி என் தலையை ஆவலோடு உயர்த்துகிறேன்.

அவர் தம்முடைய மற்றும் என்னுடைய சத்துருவை நித்தியமான அழிவிற்கு தள்ளினார். மேலும், என்னையும் அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட அனைவரையும் அவருடனே பரலோக சந்தோஷத்திற்குள்ளும், மகிமைக் குள்ளும் எடுத்துச் செல்வார்[2].

---

1. லூக். 21 : 28, ரோ. 8 : 22-25, பிலி. 3 : 20-21 தீத்து 2 : 13-14
2. மத். 25 : 31-46, 1 தெச. 4 : 16-17, 2 தெச. 1 : 6-10

## பரிசுத்த ஆவியாகிய தேவனும் நாம் பரிசுத்தமாவதும்

## கர்த்தருடைய நாள் 20

**53. வினா : பரிசுத்த ஆவியானவரைப் பற்றி உங்கள் கருத்து என்ன?**

விடை : முதலாவதாக, அவர் பிதாவோடும் குமாரனோடும் கூட உண்மையான நித்திய தேவன்.[1]

இரண்டாவதாக, உண்மையான விசுவாசத்தினால் கிறிஸ்து விலும், அவருடைய எல்லா அனுகூலங்களிலும் பங்கு பெறவும்[2], என்னை ஆறுதல்[2] அடையச்செய்து என்னோடு என்றென்றும் இருக்க[4] எனக்காக கொடுக்கப்பட்டவர்[5].

---

1. ஆதி 1 : 1-2, மத். 28 : 19. அப். 5 : 3-4, 1 கொ. 3 : 16.
2. கலா. 3 : 14, 1 பே. 1 : 2
3. யோ. 15 : 26, அப். 9 : 31
4. யோ. 14 : 16-17, 1 பே, 4 : 14
5. 1 கொ. 6 : 19, 2 கொ. 1 : 21 : 22, கலா. 4 : 6, எபே. 1 : 13.

# கர்த்தருடைய நாள் 21

**54. வினா : பொதுவான பரிசுத்த கிறிஸ்துவ சபையைப் பற்றி உன்னுடைய நம்பிக்கை என்ன?**

விடை : தேவனுடைய குமாரன்.[1] தன்னுடைய ஆவியினாலும் வார்த்தையினாலும்[2] பூமியின் துவக்கம் முதல் முடிவு வரை[3] சகல மனித குலத்திலிருந்தும்[4] உண்மையான விசுவாசத்தில் ஐக்கியமான[5] நித்திய வாழ்வுக்காக தெரிந்தெடுக்கப்பட்ட[6] சபையை தனக்காக ஒன்று சேர்த்து, காத்து, காப்பாற்றி வருகிறார்[7] என்பதை விசுவாசிக்கிறேன். மேலும் நான்[8] அந்த திருச்சபையில் ஜீவனுள்ள நபராக நித்திய காலமாக இருப்பேன்[9] என்றும் விசுவாசிக்கிறேன்.

1. யோ. 10 : 11, அப். 20 : 28, எபே. 4 : 11-13, கொலோ. 1 : 18.
2. ரோ. 1 : 16, 10 : 14-17, எபே. 5 : 26.
3. ஏசா. 59 : 21, 1 கொ. 11 : 26
4. ஆதி. 26 : 4, வெளி. 5 : 9
5. அப். 2 : 42-47, எபே. 4 : 1-6
6. ரோ. 8 : 29, எபே. 1 : 3-14
7. சங். 129 : 1-5, மத். 16 : 18, யோ. 10 : 28-30
8. 1 யோ. 3 : 14, 19-21
9. சங். 23 : 6, யோ. 10 : 27-28, 1 கொ 1 : 4-9, 1 பே. 1 : 3-5

55. வினா : பரிசுத்தவான்களின் ஐக்கியம் என்பதை எவ்வாறு நீ புரிந்து கொண்டுள்ளாய்?

விடை : முதலாவதாக, கிறிஸ்துவின் அங்கத்தினர்களாகிய விசுவாசிகள் யாவரும், ஒவ்வொருவரும் அவருடனே ஐக்கியப்பட்டுள்ளோம். மேலும் அவருடைய ஆசீர்வாதத்திலும் ஐசுவரியத்திலும் பங்குதாரர் ஆனோம்.[1]

இரண்டாவதாக, ஒவ்வொருவரும் தங்களுக்கு அளிக்கப்பட்ட தாலந்துகளை மற்ற அங்கத்தினரின் அனுகூலத்திற்காகவும் நல்வாழ்வுக்காகவும் உள்ள பூரிப்போடும் மனப்பூர்வமாகவும் உபயோகிக்க கடமைப்பட்டுள்ளோம்.

1. ரோ. 8 : 32, 1 கொ. 6 : 17, 12 : 4, 7, 12, 13, 1 யோ. 1 : 3.
2. ரோ. 12 : 4-8, 1 கொ. 12 : 20-27, 13 : 1-7, பிலி. 2 : 4-8

56. வினா : பாவ மன்னிப்பைக் குறித்து உன்னுடைய நம்பிக்கை என்ன?

விடை : கிறிஸ்துவின் நிறைவினால் தேவனானவர் என்னுடைய பாவங்களையும்[1] என் வாழ்வில் நான் போராடிக் கொண்டிருக்கும் என்னுடைய பாவ சுபாவத்தையும்[2] ஒருபோதும் நினைக்க மாட்டார். மேலும் நான் நித்திய கண்டனத்திற்கு[3] மறுபடியும் செல்லாதபடி கிறிஸ்துவின் நீதியை கிருபையாக எனக்கு அளிக்கிறார் என்று விசுவாசிக்கிறேன்.

1. சங். 103 : 3, 4, 10, 12 மீகா 7 : 18-19, 2 கொ. 5 : 18-21, 1 யோ. 1 : 7. 2 : 2
2. ரோ. 7 : 21-25
3. யோ. 3 : 17-18, 5 : 24, ரோ. 8 : 1-2

# கர்த்தருடைய நாள் 22

**57. வினா : சரீர உயிர்த்தெழுதலில் உனக்கு உண்டாகும் மன நிறைவு என்ன?**

விடை : இந்த வாழ்க்கைக்குப் பின்னால் என்னுடைய ஆத்துமா உடனடியாக என் தலையாகிய[1] கிறிஸ்துவிடம் எடுத்துக் கொள்ளப்படுவது மட்டுமல்ல என்னுடைய இந்த சரீரமும் கிறிஸ்துவின் மாட்சிமையால் எழுப்பப்பட்டு என் ஆத்துமோவோடு இணைந்து கிறிஸ்துவின் மகிமைப் படுத்தப்பட்ட சரீரமாக மாற்றப்படும்[2].

1. லூக். 16 : 22, 23 : 43, பிலி. 1 : 21-23
2. யோ. 19 : 25-26, 1 கொ. 15 : 20, 42-46, பிலி. 3 : 21, 1 யோ. 3 : 2.

**58. வினா : நித்திய வாழ்க்கை என்ற கூற்றால் நீ பெறும் மன நிறைவு என்ன?**

விடை : இப்போதே என்னுடைய இருதயத்தில் நித்திய மகிழ்ச்சியை[1] உணர ஆரம்பித்துள்ள நான், நிச்சயமாக இந்த வாழ்வுக்குப் பின்பு கண்கள் கண்டிராத, காதுகள் கேட்டிராத மனித இருதயத்தில் உருவாகாத தேவனை எப்போதும் துதித்துக் கொண்டிருக்கும் ஆசீர்வாதமாகிய முழுமையான ஆசீர்வாதத்தைப் பெற்றிருப்பேன்[2].

1. யோ. 17 : 3, ரோ. 14 : 17, 2 கொ. 5 : 2-3
2. யோ. 17 : 24, 1 கொ. 2 : 9.

# நமது நீதி

## கர்த்தருடைய நாள் 23

**59. வினா : இவை எல்லாவற்றையும் நீ விசுவாசிப்பதால், உனக்கு கிடைக்கும் பலன் என்ன?**

விடை : கிறிஸ்துவுக்குள் நான் தேவனுக்கு முன்பாக நீதிமானும் நித்திய வாழ்வுக்கு சுதந்திரனுமானவன்[1]

1. எபி. 2 : 4, யோ. 3 : 36, ரோ. 1 : 17, 5 : 11-2

**60. வினா : தேவனுக்கு முன்பாக எப்படி நீ நீதிமான்?**

விடை : இயேசு கிறிஸ்துவுக்குள் உண்மையான விசுவாசத்தினால் மட்டுமே[1].

தேவனுடைய நியாயப் பிரமாணங்களில் ஒன்றையாகிலும் கடைபிடிக்காமல்[2] அவைகளுக்கு விரோதமாக துயரம் தரக்கூடிய அளவுக்கு பாவம் செய்தேன் என்றும், இப்போதும் தீமையை நான் இழுத்துக் கொள்கிறேன்[3] என்று என் மனசாட்சி என்னை குற்றம் சுமத்திய போதும், தேவன் என்னுடைய எந்த நன்மையுமில்லாமல்[4] கிருபையினால் மாத்திரமே[5] எனக்குள் முழு நிறைவுக்கும், நீதிக்கும், கிறிஸ்துவின் பரிசுத்தத்திற்கும்[6] என்னை உரியவனாக்கினார். நான் விசுவாசமுள்ள இருதயத்தோடு[7] இந்த பலன்களை ஏற்றுக்கொண்டால் நான் எந்த பாவமும் இல்லாதவனும், செய்யாதவன் போலவும் கிறிஸ்து கடை

பிடித்த எல்லா கட்டளைகளையும் நானே கைக்கொண்டது போலவும்[8] பாவித்து இவைகளை எனக்கு அருளுகிறார்[8].

1. ரோ. 3 : 21-28, கலா. 2 : 16, எபே. 2 : 8-9, பிலி. 3 : 8-11
2. ரோ. 3 : 9-10
3. ரோ. 7 : 23
4. உபா. 9 : 6, எசே. 36 : 22, தீத்து 3 : 4-5
5. ரோ. 3 : 24 , எபே. 2 : 8
6. ரோ. 4 : 3-5, 2 கொ. 5 : 17-19, 1 யோ. 2 : 1-2
7. யோ. 3 : 18, அப். 16 : 30-31, ரோ. 3 : 22.
8. ரோ. 4 : 24-25, 2 கொ. 5 : 21.

**61. வினா : விசுவாசத்தால் மட்டுமே நீ நீதிமான் என்று எவ்வாறு சொல்கிறாய்?**

விடை : என்னுடைய விசுவாசம் தேவன் என்னை ஏற்றுக்கொள்ள என்னை தகுதியுடையவனாக்குவதில்லை. கிறிஸ்துவின் நிறைவேற்றுதலும், நீதியும், பரிசுத்தமுமே தேவனுக்கு முன்பாக என்னுடைய நீதியாகிறது.[1]

இந்த நீதியை விசுவாசத்தால் மட்டுமே நான் பெற்று எனக்கு சொந்தமாக்கிக் கொண்டேன்.

1. 1 கொ. 1 : 30-31, 2 : 2
2. ரோ. 10 : 10, 1 யோ. 5 : 10-12

# கர்த்தருடைய நாள் 24

**62. வினா : ஏன் நம்முடைய நற்கிரியைகள் நம்மை தேவனுக்கு முன்பாக முழுமையாகவோ அல்லது பகுதி நீதியாகவோ கருதப்படுவதில்லை?**

விடை : ஏனென்றால், தேவனுடைய நியாயத் தீர்ப்புக்கு முன்பாக நிற்க வேண்டிய நீதி முழுமையானதாகவும், தேவனுடைய நியாயப் பிரமாணங்களுக்கும்[1] இணக்கமுள்ளதாகவும் இருக்க வேண்டும்.

ஆனால் இந்த வாழ்க்கையில் நம்முடைய சிறந்த நற்காரியங்கள் குறையுள்ளதாகவும் பாவத்தால் மாசுபட்டதாகவும்[2] உள்ளதால் தேவனுக்கு முன்பாக நற்கிரியைகளாக கருதப்படுவதில்லை.

1. உபா. 27 : 26, கலா. 3 : 10
2. ஏசா. 64 : 6.

**63. வினா : நம்முடைய நற்காரியங்களுக்கு இவ்வாழ்விலும் வரும் வாழ்விலும் பலன் உண்டு என்று தேவனால் வாக்குத் தத்தம் செய்யப்பட்ட போதும் அவை வீணா?[1]**

விடை : இந்த பலன் கிருபையினால் கிடைக்கும் வெகுமதியே அன்றி நம்மால் சம்பாதித்தது அல்ல.[2]

1. மத். 5 : 12, எபி. 11 : 6.
2. லூக். 17 : 10, 2தீமோ. 4 : 7-8

**64. வினா : இந்த போதனை மக்களை பொறுப்பற்றவர்களாகவும், சீர்கெட்டவர்களாகவும் ஆக்காதா?**

விடை: இல்லை.

இது முடியாத ஒன்று. ஏனென்றால் உண்மையான விசுவாசத்தால் கிறிஸ்துவிடம் அன்பு கொண்டவர்கள் நன்றியறிதலின் கனியைக் கொடுக்காமல் இருக்க முடியாது[1].

## வார்த்தையும் சாக்கிரமெந்துகளும்

# கர்த்தருடைய நாள் 25

1. மத். 7 : 18, லூக். 6 : 43-45, யோ. 15 : 5.

**65. வினா : இப்படியாக விசுவாசம் மட்டுமே கிறிஸ்துவோடும் அவருடைய அனுகூலங்களோடும் நம்மை பங்குதாரராக் குகிறது என்றால் இந்த விசுவாசம் எங்கிருந்து வந்தது?**

விடை : நம்முடை இருதயங்களில் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷத்தினால்[1] கிரியை செய்து சாக்கிரமெந்து களினாலே[2] நம்மை திடப்படுத்துகிற பரிசுத்த ஆவியான வரிடமிருந்து[3] வந்தது.

1. ரோ. 10 : 17, எபே. 1 : 23 : 25
2. மத். 28 : 19-20, 1கொ. 10 : 16.
3. யோ. 3 : 5, 1கொ. 2 : 10-14, எபே. 2 : 8, பிலி. 1 : 29.

**66. வினா : சாக்கிரமெந்துகள் என்றால் என்ன?**

விடை: காணக்கூடிய. முத்திரையிடப்பட்ட பரிசுத்த அடையாளங் களே இந்த சாக்கிரமெந்துகள். அவைகளை நாம் கடை பிடிப்பதன் மூலம் தேவன் சுவிசேஷ வாக்குத்தந்தங்களை நமக்கு அறிவித்து முத்திரையிடுகிறார்.

சிலுவையிலே ஒரே பலியாக அறையப்பட்ட கிறிஸ்துவால் தேவன் நமக்கு கிருபையாக பாவ மன்னிப்பையும், நித்திய வாழ்வையும் வாக்குத் தந்தங்களாக அருளுகிறார்.[2]

1. ஆதி. 17 : 11, உபா. 30 : 6, ரோ. 4 : 10.
2. மத். 26 : 27-28, அப். 2 : 38, எபி. 10 : 10.

**67. வினா : அப்படியென்றால் இந்த வார்த்தையும் சாக்கிரமெந்துகளும் சிலுவையிலே பலியாகிய இயேசு கிறிஸ்துவையே நம்முடைய இரட்சிப்புக்கு ஒரே அஸ்திபாரம் என்ற விசுவாசத்திற்கு நம்மை வழிநடத்துகிறதா?**

விடை : ஆம், உறுதியாக.

நம்முடைய முழு இரட்சிப்பும் சிலுவையிலே பலியாகிய இயேசுவையே சார்ந்துள்ளது என்று பரிசுத்த ஆவியானவர் சுவிசேஷங்களிலே நமக்கு போதித்து சாக்கிரமெந்துகளின் மூலம் இதை உறுதிப்படுத்துகிறார்.[1]

1. ரோ. 6 : 3. 1கொ. 11 : 26, கலா. 3 : 27.

**68. வினா : புதிய உடன்படிக்கையிலே எத்தனை சாக்கிரமெந்துகளை கிறிஸ்துவானவர் நிறுவினார்?**

## பரிசுத்த ஞானஸ்நானம்

## கர்த்தருடைய நாள் 26

விடை இரண்டு : பரிசுத்த ஞானஸ்நானம். பரிசுத்த திருவிருந்து[1].

1. மத். 28 : 19-20, 1கொ. 11 : 23-26

**69. வினா : சிலுவையின் ஒரே பலியான கிறிஸ்து எந்த விதத்தில் எனக்கு அனுகூலமாகிறார் என்று பரிசுத்த ஞானஸ்நானம் அடையாளமிட்டு முத்திரையிடுகிறது?**

விடை : இந்த வெளிப்புற கழுவுதலை நிறுவியதன் மூலம்[1] கிறிஸ்துவானவர் தண்ணீர் எப்படி சரீர கறைகளை போக்குகிறதோ அதைப் போலவே அவரின் இரத்தமும் ஆவியும் என்னுடைய ஆத்துமாவின் பாவ கறைகளையும் அசுத்தங்களையும் போக்குகிறது என்ற வாக்குத்தத்தை கொடுத்துள்ளார்[2].

1. மத். 28 : 19.
2. மத். 3 : 11, மாற். 16 : 16, யோ. 11 : 33, அப். 2 : 38, ரோ. 6 : 3-4, 1 பே. 3 : 21

**70. வினா : கிறிஸ்துவின் இரத்தத்தாலும் ஆவியினாலும் கழுவப்படுதல் என்றால் என்ன?**

விடை : பாவ மன்னிப்பை, தேவனிடமிருந்து கிருபையின் மூலம் பெற்றுக் கொள்ளுதலே ஆகும். ஏனென்றால் கிறிஸ்துவின் இரத்தமாகிய அவருடைய பலி நமக்காக சிலுவையிலே சிந்தப்பட்டது[1].

அவருடைய ஆவியால், கழுவப்படுதல் என்பது பரிசுத்த ஆவியானவரால் புதுப்பிக்கப்பட்டு கிறிஸ்துவின் அங்கத்தினராக பரிசுத்தமாக்கப்படுவதால் மீண்டும், மீண்டும்

நாம் பாவத்திற்கு செத்து பரிசுத்தமும், மாசில்லாது வாழ்வதே ஆகும்[2].

1. எசே. 36 : 25, சகரி. 13 : 1, எபே. 1 : 7, எபி. 12 : 24, 1பே. 1 : 2, வெளி. 1 : 15, 7 : 14
2. யோ. 3 : 5-8, ரோ. 6 : 4, 1 கொ. 6 : 11 கொலோ. 2 : 11-12

**71. வினா : ஞானஸ்நானமாகிய தண்ணீரிலே நாம் கழுவப்பட்டது போல அவருடைய ஆவியாலும் இரத்தத்தாலும் கழுவப் படுவோம் என்று வாக்குத்தத்தத்தை எங்கு கிறிஸ்து செய்தார்?**

விடை : ஞானஸ்நானத்தை நிறுவி அவர் கூறியது நீங்கள் புறப்பட்டு போய் சகல ஜாதிகளையும் சீஷர் ஆக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள். (மத். 28 : 19)

விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாக தீர்க்கப்படுவான் (மாற்கு 16 : 16)

எங்கெல்லாம் ஞானஸ்நானத்தை குறித்தும், மறுவாழ்விற் கான கழுவுவதைப் பற்றியும், பாவங்களுக்காக கழுவப் படுதலைப் பற்றியும் விவிலியம் கூறுகிறதோ அங்கெல்லாம் இந்த வாக்குத்தத்தமும் மறுபடியும் கூறப்பட்டுள்ளது. (தீத்து 3 : 5, அப். 22 : 16)

# கர்த்தருடைய நாள் 27

**72. வினா : தண்ணீரைக் கொண்டு வெளியரங்கமான கழுவுதலே பாவத்தை கழுவுதலாகுமா?**

விடை: ஆகாது. இயேசு கிறிஸ்துவின் இரத்தமும் பரிசுத்த ஆவியானவருமே நம்முடைய எல்லா பாவங்களில் இருந்தும் நம்மை கழுவ முடியும்[1].

1. மத். 3 : 11, 1 பே. 3 : 21, 1 யோ. 1 : 7

**73. வினா : அப்படியென்றால் ஏன் பரிசுத்த ஆவியானவர் பாவ மன்னிப்பிற்கென்றும் மறுவாழ்வுக்கென்றும் கழுவப் படுதலை ஞானஸ்நானம் என்றழைக்கிறார்?**

விடை : இந்த முறையின் மூலம் ஒரு நல்ல காரியத்தை தேவன் நம்மோடு பேசுகிறார்.

சரீர அசுத்தங்களையும் ஜலம் சுத்தம் செய்வது போல இயேசு கிறிஸ்துவின் இரத்தமும் ஆவியும் நம்முடைய பாவங்களையும் நம்மிடமிருந்து அகற்றுகிறது[1] என்பதை அவர் நமக்கு போதிக்கிறார். மேலும் நம்முடைய சரீரம் ஜலத்தினால் கழுவப்படுவது போல நம்முடைய ஆவியும் பாவமற கழுவப்படுகிறது என்ற தெய்வீக உறுதியையும் அடையாளத்தையும் நமக்கு நிச்சயிக்க விரும்புகிறார்[2].

1. 1 கொ. 6 : 11, வெளி. 1 : 5, 7 : 14
2. மத். 16 : 16, அப். 2 : 38, ரோ. 6 : 3-4, கலா. 3 : 27.

**74. வினா : குழந்தையும் ஞானஸ்நானம் பெற வேண்டுமா?**

விடை : ஆம்.

குழந்தைகளும் பெரியவர்களும் தேவனுடைய உடன்படிக்கைக்கும் திருச்சபைக்கும்[1] சொந்தக்காரர்கள் விசுவாசத்தை துவக்குகிற பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் பாவத்திலிருந்து மீட்பை பெரியவர்கள் போலவே[2] குழந்தைகளுக்கும் வாக்குத் தத்தமாக்கி இருக்கிறார்.

எனவே ஞானஸ்நானம் என்கிற உடன்படிக்கையின் அடையாளத்தை அவர்களுக்கு உண்டாக்கி கிறிஸ்தவ திருச்சபையிலே அவர்களையும் சேர்த்து அவிசுவாசியின் குழந்தைகளிடமிருந்து இவர்களை வித்தியாசப்படுத்த வேண்டும்[3].

புதிய உடன்படிக்கையிலே ஞானஸ்நானம் நிறுவப்பட்டது[4] போல பழைய உடன்படிக்கையிலே நிறுவப்பட்ட விருத்த சேதனம்[5] எல்லோருக்கும் அருளப்பட்டது.

1. ஆதி. 17 : 7, மத். 19 : 14.
2. சங். 22 : 10, ஏசா. 44 : 1-3, அப். 2 : 38-39, 16 : 31
3. அப். 10 : 47, 1 கொ. 7 : 14
4. கொலோ. 2 : 11-14
5. ஆதி. 17 : 9-14

## திருவிருந்து

## 28 கர்த்தருடைய நாள்

**75. வினா : சிலுவையிலே ஒரே பலியான கிறிஸ்துவிலும் அவருடைய எல்லா அனுகூலத்திலும் பங்குபெற திருவிருந்து உன்னை எவ்வாறு அடையாளமிட்டு முத்திரை யிடுகிறது?**

விடை : இவ்விதமாக கிறிஸ்துவானவர் எனக்கும் மற்றும் எல்லா விசுவாசிகளுக்கும் அவரை நினைவுகூறும் பொருட்டு பிட்கப்பட்ட அப்பத்தை உண்ணவும், ரசத்தைப் பருகவும் கட்டளையிட்டார். அந்த கட்டகளைகளோடு சில வாக்குத் தத்த்தையும் அருளியுள்ளார்[1].

முதலாவதாக, என் கண்களுக்கு முன்பாக கிறிஸ்துவின் அப்பம் எனக்காக பிட்கப்பட்டு, பானம் எனக்காக கொடுக்கப்பட்டதோ அதைப் போலவே கல்வாரியிலே கிறிஸ்துவின் சரீரம் எனக்காக கொடுக்கப்பட்டு அவருடைய இரத்தம் எனக்காக சிந்தப்பட்டது.

இரண்டாவதாக, போதகரின் கரங்களில் இருந்து தேவனுடைய அப்பத்தையும், பானத்தையும் கிறிஸ்துவின் சரீரத்திற்கும் இரத்தத்திற்கும் அடையாளமாக நான் பெற்று என் வாயினால் ருசிப்பது எப்படி உண்மையோ அதைப் போலவே அவரும் சிலுவையில் அறையப்பட்ட தம்முடைய சரீரத்தையும் சிந்தப்பட்ட இரத்தத்தையும் கொடுத்து நித்திய வாழ்வுக்காக என்னுடைய ஆத்மாவை புதுப்பித்து ஊட்டமளிக்கிறார் என்பதும் உண்மையே.

---

1. மத். 26 : 26-26, மாற். 14 : 22-24, லூக் 22 : 19-20 1. கொ 11 : 23-25.

**76. வினா : சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவின் சரீரத்தைப் புசித்து, சிந்தப்பட்ட அவருடைய இரத்தத்தைப் பருகுவது என்றால் என்ன?**

விடை : முதலாவதாக, விசுவாசமுள்ள இருதயத்தோடு கிறிஸ்துவின் மரணத்தையும், எல்லா பாடுகளையும் ஏற்றுக் கொண்டு, பாவ மன்னிப்பையும் நித்திய வாழ்வையும் பெற்றுக்கொள்வது.[1]

இரண்டாவதாக, நம்மிலும் கிறிஸ்துவிலும் ஜீவிக்கிற பரிசுத்த ஆவியானவர் மூலம் கிறிஸ்துவின் புனிதமான சரீரத்தோடு இணைக்கப்பட்டோம்.[2] எனவே கிறிஸ்து வானவர் பரலோகத்திலும்[3] நாம் இப்பூமியிலும் இருந்தாலும், அவருடைய மாமிசத்தில் நாம் மாமிசமாகி அவருடைய எலும்புகளில் நாம் எலும்பாகி[4] ஒரே ஆத்துமாவிலே நாம் சரீரமாகி ஒரே ஆவியிலே[5] அவருடனே நித்திய காலமாக வாழவும் ஆட்கொள்ளவும் படுகிறோம்.

1. யோ. 6 : 35, 40, 50-54
2. யோ. 6 : 55-56, 1கொ. 12 : 13
3. அப். 1 : 9-11, 3 : 21. 1 கொ. 11 : 26, கொலோ. 3 : 1
4. 1கொ. 6 : 15, 17, எபே. 5 : 29 : 30, 1யோ. 4 : 13.
5. யோ. 6 : 56-58, 15 : 1-6, எபே. 4 : 15-16, 1 யோ. 3 : 24.

**77. வினா : பிட்கப்பட்ட அவருடைய சரீரத்தை உட்கொண்டு இந்த பானத்தை அருந்தும்போது அவர் தன்னுடைய சரீரத்தாலும் இரத்தத்தாலும் விசுவாசிகளை புதுப்பித்து ஊட்டமளிப்பார் என்று கிறிஸ்து எங்கு வாக்களித்துள்ளார்?**

விடை: கர்த்தருடைய பந்தியை நிறுவும்போது கர்த்தராகிய இயேசு வானவர் தாம் காட்டி கொடுக்கப்படும் இராத்திரியிலே அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி அதைப் பிட்டு கூறியதாவது இது உங்களுக்காக கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். அந்தப்படியே போஜனம் பண்ணிய பின்பு பாத்திரத்தை எடுத்து இது உங்களுக்காக சிந்தப்பட்ட என்னுடைய இரத்தமாயிருக்கிறது என்னை நினைவு கூறும்படி இதைச் செய்யுங்கள் என்றார். (1கொ. 11 : 23-26)

இந்த வாக்குத்தத்தத்தை மறுபடியுமாக பவுல் கூறும்போது நாம் பங்குபெறும் பானம் கிறிஸ்துவின் இரத்தமில்லையா? நாம் பிட்கும் அப்பம் நாம் பங்குபெறும் கிறிஸ்துவின் சரீர மில்லையா? ஏனென்றால் நாம் அநேகராய் இருந்தாலும் ஒரே சரீரமாய் இருக்கிறோம். (1 கொ. 10 : 16-17)

# கர்த்தருடைய நாள் 29

**78. வினா : அப்படியென்றால் அப்பமும் இரத்தமும் கிறிஸ்துவின் உண்மையான சரீரமாகவும் இரத்தமாகவும் மாறுகிறதா?**

விடை : இல்லை.

தண்ணீர் ஞானஸ்நானத்தில் எப்படி கிறிஸ்துவின் இரத்தமாக மாறாமல் நம்முடைய பாவத்தை கழுவாமல் தேவனுடைய அடையாளமாகவும் வாக்குறுதியாகவும்[1] உள்ளதோ அதைப்போலவே சாக்கிரமெந்தின்[2] உபயோகத் திற்காகவும் தன்மைக்காகவும் அப்பமானது கிறிஸ்துவின் சரீரம்[3] என்றழைக்கப்பட்டாலும் கர்த்தருடைய பந்தியிலே அப்பம். கிறிஸ்துவின் சரீரமாக மாறாது.[4]

---

1. எபே. 5 : 26, தீத்து 3 : 5
2. ஆதி. 17 : 10-11, யாத். 12 : 11, 13 கொ. 10 : 3-4, 1 பே. 3 : 21
3. 1 கொ. 10 : 16-17, 11 : 26-28
4. மத். 26 : 26-29

**79. வினா : அப்படியென்றால் ஏன் ஒருபுறம் கிறிஸ்து அப்பத்தை தன்னுடைய சரீரமாகவும், பானத்தை தன்னுடைய இரத்த மாகவும் அதாவது அவருடைய இரத்தத்தில் புது உடன்படிக்கை என்றும், மறுபுறம் பவுல் கிறிஸ்துவின் சரீரத்திலும் இரத்தத்திலும் பங்கெடுப்பு என்று அழைக் கிறார்கள்?**

விடை : கிறிஸ்து இந்தவிதமாக கூறுவதற்கு சிறந்த காரணம் உண்டு : இந்த உலக வாழ்க்கைக்கு அப்பமும் இரசமும் எவ்வளவு முக்கியமோ அதைப் போல் நித்திய வாழ்க்கைக்கு[1] அவருடைய சிலுவையில் அறையப்பட்ட சரீரமும் சிந்தப்பட்ட இரத்தமும் நம்முடைய

ஆத்துமாவுக்கு உண்மையான போஜனமும் பானமுமாகும் என்பதை அவருடைய பந்தியின் மூலம் நமக்கு போதிக்கிறார்.

மேலும் குறிப்பாக இந்த வெளியரங்கமான அடையாளத்தினாலும் வாக்குறுதியினாலும் நமக்கு உறுதிப்பட விரும்புவது. முதலாவதாக இந்த பரிசுத்த அடையாளத்தை அவரை நினைவு கூரும்பொருட்டு நம்முடைய வாயினாலே நாம் பெறும்போது, பரிசுத்த ஆவியானவரின் கிரியை மூலமாக அவருடைய உண்மையான சரீரத்திலும் இரத்தத்திலும் நாம் பங்கெடுக்கிறோம்.[2]

இரண்டாவதாக, அவருடைய பாடுகளும் கீழ்ப்படிதலும் ஏதோ நாம் நாமே பாடுபட்டு நம்முடைய பாவங்களுக்கு கிரயம் செலுத்தியது போல நமக்கே உண்டாகிறது.[3]

1. யோ. 6 : 51 : 55
2. 1 கொ. 10 : 16-17, 11 : 26

# கர்த்தருடைய நாள் 30

3. ரோ. 6 : 5-11

**80. வினா : கர்த்தருடைய பந்திக்கும் போப்புடைய பந்திக்கும் உள்ள வேறுபாடுகள் என்ன?**

விடை: கர்த்தருடைய பந்தி இரண்டு காரியங்களை சாட்சியிடுகிறது.

முதலாவதாக, இயேசு கிறிஸ்து சிலுவையிலேயே தம்மை தாமே ஒரே தரம் பலியாக்கியதன் மூலம் நம்முடைய பாவங்களிலிருந்து முழுமையான மன்னிப்பை நமக்கு ஏற்படுத்தினார்.[1]

இரண்டாவதாக, தம்முடைய உண்மையான சரீரத்தோடு பரலோகில் தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும்[2] கிறிஸ்துவோடு, பரிசுத்த ஆவியானவர் நம்மை ஒன்றப்பண்ணினார்[3]. ஆகவே அவரை நாம் வழிபட வேண்டும்.

ஆனால் போப்பின் பந்தி நமக்கு போதிப்பது முதலாவதாக பாதிரியாரிடமிருந்து தினமும் கிடைக்கப் பெற்றாலேயன்றி கிறிஸ்துவின் பாடுகளால் உயிருள்ளோருக்கும் மரித்தோருக்கும் பாவ மன்னிப்பு உண்டாகாது.

இரண்டாவதாக, கிறிஸ்துவானவர் அப்பமும் திராட்சை இரசமுமாக சரீரத்தில் உருப்பெற்றிருப்பதால் அதை நாம் வழிபடவேண்டும்.[4]

எனவே, போப்பின் பந்தி என்பது இயேசு கிறிஸ்துவின் பாடுகளையும், பலியையும் புறம்பாக்கி விட்டு விக்கிரக ஆராதனைக்கு வழிவகுக்கிறது.

---

1. மத். 26 : 28, யோ. 19 : 30. எபி. 7 : 27, 9 : 12, 25-26 10 : 10-18

2. யோ. 20 : 17, அப். 7 : 55-56, எபி.1 : 3, 8 : 1.
3. 1கொ. 6 : 17, 10 : 16-17.
4. யோ. 4 : 21-24, பிலி. 8 : 20, கொலோ. 3 : 1, 1தெச. 1 : 10.

**81. வினா : கர்த்தரின் பந்தியில் யார் பங்கெடுக்கலாம்?**

விடை : யாரெல்லாம் தங்கள் பாவத்தின் நிமித்தம் தங்கள் மீது மகிழ்ச்சி இல்லாமல் இருக்கிறார்களோ, யாரெல்லாம் அந்த பாவங்கள் மன்னிக்கப்பட்டவை என்றும், மேலும் தங்களுடைய பலவீனங்களை எல்லாம் கிறிஸ்துவின் பாடு மரணத்தினால் மூடப்பட்டது என்றும், விசுவாசத்திலே தங்களை உறுதிப்படுத்திக்கொண்டு வாழ்க்கையைச் சீர்படுத்த விரும்புகிறார்களோ அவர்களே. ஆனால் மாய்மாலக்காரர்களும் பாவத்தை அறிக்கையிட மறுப்பவர்களும் கர்த்தருடைய பந்தியில் பங்கெடுத்தால் நியாயத் தீர்ப்பு அவர்கள் மேல் விழும்[1].

1. 1கொ. 10 : 19-22, 11 : 26 : 32.

**82. வினா : தன்னுடைய அறிக்கையிலும், வாழ்க்கையிலும் அவ் விசுவாசத்தையும் தெய்வ பக்தி இல்லாமையையும் வெளிப்படுத்துகிறவர்களை கர்த்தருடைய பந்தியில் அனுமதிக்கலாமா?**

விடை : முடியாது.

அப்படி அனுமதித்தால் தேவனுடைய உடன்படிக்கையின் புனிதத்தன்மை கெடுவதால் அவருடைய சீற்றம் திருச்சபையின் அனைத்து அங்கத்தினர் மீதும் தூண்டப்படுகிறது.[1]

எனவே, இப்படிப்பட்டவர்கள் தங்கள் வாழ்க்கையை சீர் செய்யாவிட்டால் கிறிஸ்துவும் அவருடைய அப்போஸ்தலர்களும் இட்ட கட்டளையின்படி கிறிஸ்துவ திருச்சபை பரலோக இராஜ்யத்தின் திறவுகோலால் இவர்களை வெளியேற்ற கடமைப்பட்டுள்ளது.

# கர்த்தருடைய நாள் 31

1. சங். 50 : 16, ஏசா. 1 : 11-17, 1கொ. 11 : 17-34

**83. வினா : பரலோக இராஜ்யத்தின் திறவுகோல்கள் என்ன?**

விடை : பரிசுத்த சுவிசேஷத்தின் பிரசங்கமும் திருச்சபையின் கட்டுப்பாடுமே ஆகும். இவை இரண்டின் மூலம் பரலோக இராஜ்யம் விசுவாசிகளுக்கு திறக்கப்பட்டு, அவிசுவாசி களுக்கு அடைக்கப்பட்டுள்ளது.[1]

1. மத். 16 : 19. யோ. 20 : 21-23

**84. வினா : எவ்வாறு சுவிசேஷ பிரசங்கத்தால் பரலோக இராஜ்யம் திறக்கப்பட்டும், மூடப்பட்டுள்ளுமுள்ளது?**

விடை : கிறிஸ்துவின் கட்டளைப்பிரகாரம்.

தேவன் அவர்களுடைய பாவங்களை கிறிஸ்துவின் நற்கிரியையால் உண்மையிலே மன்னித்தார் என்றும், இந்த சுவிசேஷ வாக்குத்தத்தத்தை அவர்கள் உண்மையான விசுவாசத்தால் ஏற்றுக்கொள்கிறார்கள் என்றும் ஒவ்வொரு விசுவாசியும் அறிக்கையிட்டு வெளியரங்கமாக சாட்சி யிடுவதன் மூலம் பரலோக இராஜ்யம் திறக்கப்படுகிறது.

தங்கள் பாவங்களை அறிக்கையிடாத அவிசுவாசிகள் மீதும் மாய்மாலக்காரர் மீதும் தேவனுடைய கோபமும் நித்திய தீர்ப்பும் இருக்கும் என்று அறிக்கையிட்டு சாட்சி யிடுவதன் மூலம் பரலோக இராஜ்யம் மூடப்படுகிறது.

மேலும், சுவிசேஷ சாட்சியின்படி தேவன் அவர்களை இவ்வாழ்விலும், வரும் வாழ்விலும் நியாயந்தீர்ப்பார்.[1].

1. மத். 16 : 19, யோ. 3 : 31-36, 20 : 21-23

**85. வினா : திருச்சபையின் கட்டுப்பாட்டின் மூலம் எவ்வாறு பரலோக இராஜ்யம் மூடவும் திறக்கவும் பட்டுள்ளது?**

விடை: கிறிஸ்துவின் கட்டளையின்படி யாரெல்லாம் தங்களை கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொண்டு ஆனால் கிறிஸ்தவர் அல்லாதவர் போல் தங்கள் வாழ்விலும் மதக் கோட் பாட்டிலும் சாட்சியிடுகிறார்களோ அவர்களை முதலில் சகோதர முறையில் அவர்கள் தவறை சுட்டிக்காட்டி எச்சரிக்கையிட வேண்டும்.

அப்படி இருந்தும் அவர்கள் தங்கள் தவற்றையும் தீயக் காரியங்களையும் திருத்திக் கொள்ளாவிட்டால் அவர்களை குறித்து திருச்சபையின் மூப்பர்களிடம் அறிவிக்க வேண்டும்.

மூப்பர்களின் நியாயமான கண்டிப்புக்கும் செவி சாய்க் காமல் இருந்தால் மூப்பர்களால் இவர்கள் சாக்கிரமந்தில் பங்கெடுப்பதில் இருந்தும் திருச்சபையின் சங்கத்தினரில் இருந்தும் தள்ளி வைக்கப்படுவார்கள். மேலும் தேவனால் கிறிஸ்துவின் இராஜ்யத்திலிருந்தும் தள்ளி வைக்கப் படுவார்கள்.[1]

இருந்தபோதும், அவர்கள் மறுமுறையும் உறுதிகூறி தங்களுடைய வாழ்க்கையை சீர்த்திருத்துவார்களே யானால் அவர்கள் மறுபடியும் கிறிஸ்துவுக்குள்ளும் திருச் சபையிலும் அங்கத்தினராவார்கள்.[2]

1. மத். 18 : 15-20, 1 கொ. 5 : 3-5, 11 : 13, 2 தெச. 3 : 14-15
2. லூக். 15 : 20-24, 2கொ. 2 : 6-11

## பாகம் மூன்று

# நம்முடைய நன்றியுணர்வு

## கர்த்தருடைய நாள் 32

**86. வினா : கிருபையினால் கிறிஸ்துவின் மூலம் நம்முடைய எந்த சுய நற்கிரியையுமின்றி நம்முடைய துன்பத்தில் இருந்து மீட்கப்பட்டும், நாம் ஏன் நற்கிரியைகளை செய்ய வேண்டும்?**

விடை : ஏனென்றால், நாம் அவருடைய சாயலாய் இருக்கும்படி கிறிஸ்துவானவர் நம்மை மீட்டு, பரிசுத்த ஆவியால் நம்மைப் புதுப்பித்தபடியால், நாமும் அவருடைய வாழ்க்கை முழுவதும் அவருடைய அனுகூலங்களுக்காக[1] அவருக்கு நன்றியறிதலோடும் அவர் நம்மில் மகிமைப் படும்படியாகவும் இருக்க வேண்டும்[2]. மேலும், நாமும் நம்முடைய விசுவாசத்தை அதன் கனிகளாலே[3] உறுதிப் படுத்தி, நம்முடைய தெய்வீக வாழ்க்கை முறையால் நம்முடைய அயலானை கிறிஸ்துவுக்காக ஜெயங் கொள்வோம்.[4]

1. ரோ. 6 : 13, 12 : 1-2, 1பே. 2 : 5-10
2. மத். 5 : 6, 1கொ. 6 : 19-20
3. மத். 7 : 17-18, கலா. 5 : 22-24, 2பே. 1 : 10-11
4. மத் 5 : 14-16, ரோ. 14 : 17-19, 1பே. 2 : 12, 3 : 1-2

87. வினா : நன்றியற்று, குற்றத்தை உணர்ந்து வருந்தாத வாழ்க்கையில் இருந்து தேவனிடத்தில் திரும்பாதவர்கள் இரட்சிக்கப்படுவார்களா?

விடை : இல்லை.

தூய்மையற்றவர்களும் விக்கிரக ஆராதனைக்காரரும் விபச்சாரக்காரரும் திருடரும் பொருளாசைக்காரரும் குடிகாரரும் புறங்கூறுபவரும் கொள்ளைக்காரரும் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிக்க மாட்டார்கள் என்று வேதம் கூறுகிறது.[1]

1. 1கொ. 6 : 9-10, கலா. 5 ; 19-21, எபே. 5 : 5-6, 1 யோ. 3 : 14

# கர்த்தருடைய நாள் 33

**88. வினா : செய்த பாவத்திற்கு உண்மையான மனவருத்தம் அல்லது மனித வாழ்வில் மதமாற்றம் என்றால் என்ன?**

விடை : பழைய சுபாவத்தைப் புறக்கணித்து புதிய வாழ்வுக்குள் வருவது.[1]

1. ரோ. 6 : 1-11, 1கொ. 5 : 7, 2கொ. 5 : 17, எபே. 4 : 22-24, கொலோ. 3 : 5-10

**89. வினா : பழைய சுபாவத்தைப் புறக்கணித்தல் என்றால் என்ன?**

விடை : இருதயம் நிறைந்த கவலையோடு தேவனை நம்முடைய பாவத்தால் புண்படுத்தி விட்டோமே என்று வேதனை யோடும், அந்த பழைய சுபாவத்தை வெறுத்து அதை விட்டு அகல்வதே ஆகும்[1].

1. சங். 51 : 3-4, 17, யோவேல் 2 : 12, 13, ரோ. 8 : 12-13, 2கொ. 7 : 10

**90. வினா : புதிய சுபாவத்தின் வாழ்விற்கு வருவது என்றால் என்ன?**

விடை: தேவனுக்குள் கிறிஸ்துவின் மூலம்[1] மனம் நிறைந்த மகிழ்ச்சியும், அன்பும், புத்துணர்வுடன் எல்லாவித நற்கிரியையோடும் தேவனுடைய சித்தத்திற்குள் வாழ்வதேயாகும்.[2]

1. சங். 51 : 8 : 12, ஏசா. 57 : 15, ரோ. 5 : 14 : 17.
2. ரோ. 6 : 10-11, கலா. 2 : 20

**91. வினா : நற்கிரியைகள் என்ன?**

விடை : உண்மையான விசுவாசத்தோடும்[1] தேவனுடைய நியாயப் பிரமாணங்களுக்கு[2] ஏற்ற அவருக்கு மகிமை[3] தரக்கூடிய செயலே நற்கிரியைகள். மனித நல்லொழுக்கத்தை ஏற்றோ[4] அல்லது சுய கருத்தைச் சார்ந்தோ அமைவது நற்கிரியைகளாகாது.

1. யோ. 15 : 5, ரோ. 14 : 23, எபி. 11 : 6
2. லேவி. 18 : 4, 1 சாமு. 15 : 22, எபே. 2 : 10
3. 1கொ. 10 : 31
4. எபா. 12 : 32, ஏசா. 29 : 13, எசே. 20 : 18-19, மத். 15 : 7-9

## பத்துக் கட்டளைகள்

## 34 கர்த்தருடைய நாள்

**92. வினா : தேவனுடைய நியாயப் பிரமாணங்கள் என்ன?**

விடை : (யாத். 20 : 1, 17)

தேவன் பேசிச் சொல்லிய சகல வார்த்தைகளுமாவன : உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப் பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.

மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தை யாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்.

நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம். உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து என்னை பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிற வராயிருக்கிறேன்.

என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளை கைக் கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறை மட்டும் இரக்கஞ்செய்கிறவராயிருக்கிறேன்.

உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக. கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார். ஓய்வு நாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக. ஆறு நாளும் நீ வேலை செய்து உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக.

ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வு நாள். அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருக ஜீவனானாலும், உன் வாசலில் இருக்கிற அந்நியனானாலும் யாதொரு வேலையும் செய்ய வேண்டாம்.

கர்த்தர் ஆறு நாளைக்குள்ளே வானத்தையும், பூமியையம் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையுமே உண்டாக்கி ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். ஆகையால் கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து அதைப் பரிசுத்த மாக்கினார்.

உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத் திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனை யும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக.

கொலை செய்யாதிருப்பாயாக.

விபச்சாரம் செய்யாதிருப்பாயாக.

களவு செய்யாதிருப்பாயாக.

பிறனுக்க விரோதமாக பொய்ச் சாட்சி சொல்லாதிருப் பாயாக.

பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக. பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ளயாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக என்றார்.

**93. வினா : இந்த கட்டளைகள் எவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளது?**

விடை : இரண்டு பாகங்களாக.

முதலாவது, தேவனோடுள்ள நமது தொடர்பை போதிக்கிறது.

இரண்டாவதாக, நம்முடைய அயலானுக்கு நாம் ஆற்ற வேண்டிய பணிகளைப் பற்றி போதிக்கிறது.

**94. வினா : முதலாவது கற்பனையில் இருந்து தேவன் எதிர்பார்ப்பது என்ன?**

விடை: என்னுடைய இரட்சிப்புக்காக நான் விக்கிரக ஆராதனை யையும்[1] பில்லிசூனியத்தையும் மூடநம்பிக்கையையும்[3] புண்ணியவான்களிடத்திலோ அல்லது எந்த படைப் பினிடமோ[3] பிரார்த்திப்பதை விட்டு ஒழியவேண்டும்.

மேலும், உண்மையான ஒரே தேவனை[4] அறிந்து, அவரையே நம்பி[5] எல்லாவித தாழ்மையோடும்[6] பொறுமை யோடும்[7] அவரிடத்தில் என்னை அர்ப்பணித்து, எல்லா நன்மையையும் அவரிடமே எதிர்பார்த்து[8] அவரை முழு இருதயத்தோடும் அன்பு[9] செலுத்தி, அவருக்கு பயந்து[10] அவரை கனம்பண்ண வேண்டும்[11]. சுருக்கமாக, தேவனு டைய சித்தத்திற்கு விரோதமானவைகளை விட்டொழிய வேண்டும்.[12]

1. 1கொ. 6 : 9-10, 10 : 5-14, 1யோ. 5 : 21
2. லேவி. 19 : 31, உபா. 18 : 9-12
3. மத். 4 : 10, வெளி. 19 : 10, 22 : 8-9
4. யோ. 17 : 3
5. எரே. 17 : 5, 7.
6. 1 பே. 5 : 5-6
7. ரோ. 5 : 3-4, 1 கொ. 10 : 10, பிலி. 2 : 14, கொலோ. 1 : 11, எபி. 10 : 36.
8. சங். 104 : 27-28, ஏசா. 45 : 7, யாக். 1 : 17.
9. உபா. 6 : 5 (மத். 22 : 37)
10. உபா. 6 : 2, சங். 111 : 10, நீதி. 1 : 7, 9 : 10, மத். 10 : 28, 1பே. 1 : 17
11. உபா. 6 : 13 (ம. 4 : 10) உபா. 10 : 20
12. மத். 5 : 29-30, 10 : 37-39, அப். 5 : 29.

**95. வினா : விக்கிரக ஆராதனை என்றால் என்ன?**

விடை: தம்முடைய வார்த்தையின்[1] மூலம் தம்மை வெளிப் படுத்தின ஒரே தேவனுக்கு பதிலாக உண்டாக்கப்பட்ட ஒன்றின் மீது நம்முடைய நம்பிக்கையை வைப்பதே விக்கிரக ஆராதனையாகும்.

1. 1 நாளா. 16 : 26, கலா. 4 : 8-9, எபே. 5 : 5, பிலி. 3 : 19.

## கர்த்தருடைய நாள் 35

**96. வினா : இரண்டாம் கற்பனையில் தேவன் எதிர்பார்ப்பது என்ன?**

விடை : அவரது கற்பனைக்கு விரோதமாக ஓர் உருவத்தை உண்டாக்கி[1]. அதை வணங்குவதோ, அதற்கு சேவை செய்வதோ கூடாது.[2]

1. உபா. 4 : 15-16, ஏசா. 40 : 18 25, அப். 17 : 29, ரோ. 1 : 23
2. லேவி. 10 : 1-7, உபா. 12 : 30, 1சாமு. 15 : 22 : 23, மத். 15 : 9, யோ. 4 : 23 : 24.

**97. வினா : அப்படியானால் நாம் எந்த ஓர் உருவத்தையும் உண்டாக்கக் கூடாதா?**

விடை : தேவன் எந்தவொரு தோற்றத்திலும் வெளிப்படையாக காட்சி தருவதில்லை. காட்சி தரலாமென்பதும் இல்லை. படைக்கப்பட்டவைகள் தோற்றமாகப் பெறலாம். ஆனால் தேவன் அவைகளை வணங்க வேண்டுமென்பதற்காகவோ உருவாக்குவதை அல்லது அதன் வழியாக தேவனுக்கு ஊழியம் செய்வதற்காகவோ உருவாக்குவதை அல்லது உருவங்களை அமைப்பதை தேவன் வெறுக்கிறார்.[1]

1. யாத். 34 : 13-14, 17, எண். 33 : 52 : 2, ராஜா 18 : 4-5 ஏசா. 40 : 25.

**98. வினா : திருச்சபையில் உருவங்கள் அல்லது சிலைகளுக்கு இடமளிக்கப்படுவது பொறுத்துக் கொள்ள இயலாதிருப்பது போல பொதுநிலை மக்களுக்கென புத்தகங்கள் இருப்பது பொறுத்துக் கொள்ள இயலாததா?**

விடை : இல்லை.

ஏனென்றால் நாம் தேவனைக் காட்டிலும் அறிவுப்பூர்வமானவர்களாக இருக்க முடியாது. அவர் தமது ஜனங்களை ஊமையான உருவச் சிலைகளின் வழியாக கற்பிக்கப்படுவதை விரும்பவில்லை.[1] ஆதலால் ஜீவனுள்ள வார்த்தைகளை பிரசங்கிப்பதின் மூலம் கற்பிக்கப்பட விரும்புகிறார்.[2]

1. ஏரே. 10 : 8, ஆபகூ 2 : 18-20
2. ரோ. 10 : 14-15, 17, 2தீமோ. 3 : 16-17, 2பே. 1 : 19

# 36 கர்த்தருடைய நாள்

**99. வினா : மூன்றாம் கற்பனையில் இருந்து தேவன் எதிர்பார்ப்பது என்ன?**

விடை : நாம் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்குவதையோ[1] நிந்தித்து தூசிப்பதையோ[2] பொய்யாணையிடுவதையோ[3] அல்லது இப்படிப்பட்ட பொல்லாத பாவங்களைக் கண்டும் காணாமல் இருப்பதின் மூலம் தங்களையும் பங்காளியாக்கிக் கொள்வதை[4] தேவன் விரும்பாமல், அவரது பரிசுத்த நாமத்தை பயத்தோடும் பக்தியோடும்[5] வணங்குவதினாலே நாம் அவரை அறிக்கையிடுகிறோம்[6] அழைக்கிறோம்[7]. நமது வார்த்தையினாலும் செய்கையினாலும்[8] அவரை துதிக்கிறோம்.

1. லேவி. 24 : 10-17
2. லேவி. 10 : 12.
3. மத். 5 : 37, யாக் 5 : 12.
4. லேவி. 5 : 1, நீதி. 29 : 24
5. சங். 99 : 1-5, ஏசா. 45 : 23, ஏரே. 4 : 2
6. மத். 10 : 32-33, ரோமர். 10 : 9-10
7. சங். 50 : 14-15, 1திமோ. 2 : 8.
8. ரோம. 2 : 24 : கொலோ. 3 : 17, 1திமோ. 6 : 1

**100.வினா : தேவனுடைய நாமத்தை சோதிப்பதின் மூலமும் நிந்திப்பதின் மூலமும் கொடிய பாவத்தைச் செய்கிறவர்களையும் தடுக்காதவர்களின் மேலும் தேவன் கோபம் கொள்கிறாரா?**

விடை: ஆம். தேவன் கோபம் கொள்கிறார்[1] எந்தப் பெரும் பாவத்தைக் காட்டிலும் தேவ கோபத்தைத் தூண்டுவது அவரது நாமத்தை வீணிலே வழங்குதலாகும். அதனால் தான் அப்படிப்பட்டவைகளுக்கு மரணம் தண்டனையாக வழங்கப்படவேண்டுமென்று தேவன் கட்டளையிடுகிறார்.

1. லேவி. 5 : 1.
2. லேவி. 24 : 16.

# கர்த்தருடைய நாள் 37

**101.வினா : தேவனுடைய நாமத்தினாலே, தேவத்துவத்திற்கேற்ற வழியில் உறுதிமொழி எடுக்கலாமா?**

விடை : உறுதிமொழி எடுக்கலாம்.

எப்போது அரசானது தனது மக்களிடம் தேவனுடைய மகிமைக்காகவும், அண்டை நாட்டாரின் நலனுக்காகவும் தேசப் பற்றையும், உண்மையையும் நிலைநாட்டுவதற்காகவும், சுமுகமாக சூழ்நிலையை உருவாக்குவதற்கும் தேவைப்படும்போது உறுதிமொழி கேட்கும்போதும். இந்த உறுதிமொழி எடுத்தல் தேவனுடைய வார்த்தையை[1] சார்ந்ததாக இருக்கிறது. ஆகையினாலே பழைய புதிய ஏற்பாட்டுப் புனிதர்கள் சரியான முறையிலே இதை உபயோகித்தனர்.[2]

1. உபா. 6 : 13, 10 : 20, எரே. 4 : 1-2, எபி. 6 : 16.
2. ஆதி. 21 : 24, 31 : 24, 31 : 53, யோக. 9 : 15, 1சாமு. 24 : 22, 1ராஜா 1 : 29-30 ; ரோ. 1 : 9, 2கொரி. 1 : 23.

**102.வினா : நாம் புனிதர்களின் மேலும் அல்லது தேவனின் வேறு படைப்புக்கள் மேலும் உறுதிமொழி எடுக்கலாமா?**

விடை : எடுக்கக் கூடாது.

தேவனுடைய அழைப்பின் பேரில் எடுக்கப்படுவது சட்டப்பூர்வமான உறுதிமொழி. அவரே உள்ளந்திரியங்களை அறிந்திருக்கிறவர். உண்மைக்கு சாட்சியாக இருப்பது மட்டுமல்லாது நான் தவறான உறுதிமொழி எடுத்தால் தண்டிப்பதற்குமாக இருக்கிறார். இப்படிப்பட்ட பேர் பெற்ற படைப்பு வேறெதுவுமில்லை.[2]

1. ரோ. 9 : 1, 2கொரி. 1 : 23
2. மத். 5 : 34-37, 23 : 16-22, யாக. 5 : 12

# கர்த்தருடைய நாள் 38

**103.வினா : நான்காவது கற்பனையில் இருந்து தேவன் எதிர்பார்ப்பது என்ன?**

விடை : முதலாவதாக, சுவிசேஷ ஊழியத்தையும், பள்ளிகளையும் பராமரிப்பதோடு குறிப்பாக ஓய்வு நாளன்று[1] நான் தேவனுடைய வார்த்தையைக் கேட்பதற்காக ஆயத்தத் துடன் தேவ சபையில்[2] பங்குகொள்கிறேன்.[3] சபையின் ஆராதனை ஒழுங்குகளை உபயோகிப்பது[4]. கர்த்தரை நோக்கி பொதுவான வேண்டுதலும், ஏழைகளுக்கும், காணிக்கைகளையும் கொடுப்பேன்[5].

இரண்டாவதாக, என் வாழ்நாளெல்லாம் பொல்லாத வேலைகளை செய்வதை விட்டுவிட்டு ஓய்ந்திருப்பேன்[5]. கர்த்தர் பரிசுத்த ஆவியானவரின் மூலமாக என்னிலே பணி செய்யட்டும், அதன் மூலம் இந்த வாழ்வில் நித்திய இளைப்பாறுதல் என்னில் ஆரம்பமாகட்டும்[7].

1. உபாக 6 : 4-9, 20-25, 1கொ. 9 : 13, 14, 2திமோ. 2 : 2, 3 : 13-17, தீத் 1 : 5
2. உபா. 12 : 5-12, சங். 40 : 9-10, 68 : 25, அப். 2 : 42-47, எபி. 10 : 23, 25.
3. ரோ. 10 : 14-17, 1கொரி. 14 : 26-33, 1தீமோ. 4 : 13.
4. 1கொரி. 11 : 23-24.
5. கொலோ. 3 : 16, 1 தீமோ. 2 : 1.
6. சங். 50 : 14, 1கொரி. 16 : 2, 2 கொரி. 8 மற்றும் 9.
7. ஏசா. 66 : 23, எபி. 4 : 9-11

# கர்த்தருடைய நாள் 39

**104.வினா : ஐந்தாவது கற்பனையில் இருந்து தேவன் எதிர்பார்ப்பது என்ன?**

விடை : நான் எனது தாய் தந்தை என்னை ஆளுகை செய்வோர் மீது முழுக் கனத்தையும் அன்பையும் விசுவாசத்தையும் வைத்து, அனைவருக்கும் கீழ்ப்படிந்து அவர்கள் கொடுக்கும் நல்ஆலோசனைகளையும் ஒழுக்கத்தையும்[1] மட்டு மல்லாது அவர்களது பலவீனத்தையும் கோபத் தையும்[2] சகிப்பதும், அவர்களது கைகளினால் ஆளப் படுவதும்[3] தேவனுடைய சித்தமாக இருக்கிறது.

1. யாத். 21 : 17, நீதி. 1 : 8, 4 : 1, ரோ. 13 : 1-2, எபே. 5 : 21-22, 6 : 21-22, 6 : 7-9 கொலே 3 : 18-4 : 1
2. நீதி 20 : 20, 23 : 22, 1பே. 2 : 18.
3. மத். 22 : 21, ரோ. 13 : 1-8, எபே. 6 : 1-9, கொரோ. 3 : 18-21

## கர்த்தருடைய நாள் 40

**105.வினா : ஆறாம் கற்பனையில் இருந்து தேவன் எதிர்பார்ப்பது என்ன?**

விடை : எனது சிந்தை செய்கை மற்றும் சொல் இவற்றின் மூலம் தனிப்பட்ட விதத்திலோ அல்லது பிறர் மூலமாகவோ என் அடாத செயல்களை செய்வதின் மூலமும் என் அயலானை கனவீனப்படுத்துவதோ வெறுப்பதோ காயப்படுத்துவதோ அல்லது கொலை செய்வதோ கூடாது.[1] சரியாகக் கூறினால், நான் எல்லா பழிவாங்கும் ஆசையையும் விட்டொழிக்க வேண்டும்.[2] மேலும், எனக்கு நானே ஆபத்துக்குள்ளாக்கிக் கொள்வதோ அல்லது விளைவைப் பற்றிக் கவலைப்படாது ஆபத்துக்குள்ளாக்கிக் கொள்வதோ கூடாது[3]. ஆகையினாலே அரசும் அதிகாரத்தைக் கையிலெடுத்து கொலையினைத் தவிர்க்கிறது.[4]

1. ஆதி. 9 : 6, லேவி. 19 : 17-18, மத். 5 : 21-22, 26 : 52.
2. நீதி. 25 : 21-22, மத். 18 : 35, ரோ. 12 : 19, எபே. 4 : 26.
3. மத். 4 : 7, 26 : 52, ரோ. 13 : 11-14
4. ஆதி. 9 : 6, யாத், 21 : 14, ரோ. 13 : 4.

**106.வினா : ஆனால் இந்த கற்பனை கொலையைப் பற்றி மட்டுமா கூறுகிறது?**

விடை: கொலையின் அருவருப்பதின் மூலம் தேவன் கற்றுத் தருவது கொலையின் அடிச்சுவடுகளான பகைமை, வெறுப்பு, கோபம், பழிவாங்கும் ஆசையாவற்றையும் தான் வெறுக்கிறார்[1] என்பதையும் இவையாவும் கொலை சார்ந்தவைகள்[2] என்றும் கூறுகிறார்.

1. நீதி : 14 : 30, ரோ. 1 : 29, 12 : 19, கலா. 5 : 19-21, யாக. 1 : 20, 1 யோ 2 : 9-11
2. 1 யோ. 3 : 15.

**107.வினா : இப்படியாக நாம் நமது அயலானை இப்படிப்பட்ட பழிகளில் கொல்லாமல் இருப்பது எப்படி?**

விடை : போதுமானதுமாக இல்லை. தேவன் பகைமை, வெறுப்பு, கோபம் அவைகளை கண்டனம் செய்யும்போதே நம்மை நேசிப்பது போல நம் அயலானை நேசிக்க வேண்டு மென்றும்[1]. பொறுமை, சமாதானம், இரக்கம், தயவு, சகோதரத்துவத்தோடு இருக்க வேண்டுமென்றும்[2] அவனை ஆபத்தினின்று நம்மாலான மட்டும் காக்க வேண்டு மென்றும், நமது பகைவர்களுக்கும் நம்மைச் செய்ய வேண்டுமென்றும் கட்டளையிடுகிறார்.

1. மத். 7 : 12, 22 : 39, ரோ. 12 : 10.
2. மாக். 5 : 5, லூக். 6 : 36, ரோ. 12 : 10, 18, கலா. 6 : 1-2 எபே. 4 : 2, கொலோ. 3 : 12, 1பே. 3 : 8.
3. யாத். 23 : 4-5, மத். 5 : 44-45, ரோ. 12 : 20.

# கர்த்தருடைய நாள் 41

**108.வினா : ஏழாம் கற்பனை நமக்கு என்ன கற்றுக் கொடுக்கிறது?**

விடை: கற்புடைமை அல்லது தூய்மைக்கு விரோதமான அனைத்தையும் தேவன் சபிக்கிறார்.[1] ஆகையினாலே நாம் அசுத்த நினைவுகளை நம் அகத்தினின்று (இதயத் தினின்று) நீக்கவேண்டும்.[2] கற்புடைய வாழ்க்கையும் ஒழுக்கமுள்ள வாழ்க்கையும் திருமணத்திற்கு முன்பும் பின்பும் வாழவேண்டும்.[3]

1. லேவி 18 : 30, எபே. 5 : 3-5
2. நியாயாதி. 22 : 23
3. 1 கொரி 7 : 1-9, 1 தெசலோ. 4 : 3-8, எபி. 13 : 14.

**109.வினா : தேவன் தமது கற்பனையில் விபச்சாரம் மட்டுமின்றி அதைச் சார்ந்த வெட்கங்கெட்ட பாவச்செயல்களை செய்யக் கூடாதென்கிறாரா?**

விடை: நமது சரீரமும் ஆத்துமாவும் பரிசுத்த ஆலயமாக இருப்பதினாலே, நாம் நம்மை பரிசுத்தமும், பழுதற்றதுமாக காத்துக் கொள்வது தேவனுடைய சித்தமாயிருக்கிறது.[1.] ஆகையினாலே தேவன் எல்லாவிதமான பரிசுத்த குலைச்சலான செயல்கள், சைகைகள், வார்த்தைகள், நினைவுகள், விருப்பங்கள், மற்றெந்த பரிசுத்த குலைச் சலான செய்கையை தூண்டுபவைகளையும் வெறுக் கிறார்.[2]

1. மத். 5 : 27-29, 1கொரி. 6 : 18-20, எபே. 5 : 3-4
2. 1கொரி. 15 : 33, எபே. 5 : 18.

# கர்த்தருடைய நாள் 42

**110.வினா : எட்டாம் கற்பனையில் எதைத் தவிர்க்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்?**

விடை: தேவன் திருட்டையும், கொள்ளையையும் அடியோடு தவிர்க்கச் சொல்வது மட்டுமல்ல திருக்குள்ள திட்டங்கள் செயல்களான கள்ளத்தராக.[1] கள்ளத்தனமான அளவுகள். ஏமாற்று வாணிகம், கள்ளத்தனமான பணம் மற்றும் தகாத வட்டியையும் தவிர்க்கச்[2] சொல்வதோடு நமது அயலானை எந்த வழியிலும் பலவந்தமாகவோ அல்லது உரிமை பாராட்டியோ ஏமாற்றுவது கூடாது.[3] அத்தோடு எல்லாவித பேராசைகள்[4] பழிச்செயல்கள் அல்லது தேவனுடைய வரங்களைத் தவறாகப் பயன்படுத்துதலையும்[5] தேவன் வெறுக்க அல்லது தவிர்க்கச் சொல்கிறார்.

1. யர். 22 : 1, 1 கொரி. 5 : 9-10, 6 : 9-10
2. உபா. 25 : 13-15, சங். 15 : 5, நீதி. 11 : 1, 12 : 22, எசே. 45 : 9-12, லூக். 6 : 35.
3. மீகா. 6 : 9-11, லூக். 3 : 14, யாக். 5 : 1-6
4. லூக். 12 : 15, எபே. 5 : 5
5. நீதி 21 : 20, 23 : 20-21, லூக். 16 : 10-13

**111.வினா : தேவன் இந்த கற்பனையில் உன்னிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார்?**

விடை: என் அயலானானோடு நல்லுறவை வலுப்படுத்தும் பொருட்டு எவ்விடத்திலும் என்னால் முடிந்தவரை எனக்கும் மற்றவர்க்கும் என்னோடு தொடர்பு கொள்ள விரும்புகிறவர்களுக்கும் இடையே நல்லதொரு தொடர்பை ஏற்படுத்துவதோடு எனது நல்லுழைப்பினாலே தேவையுள்ளோருக்கு கொடுத்து உதவவும்[1] என்னிட மிருந்து எதிர்பார்க்கிறார்.

1. ஏசாயா. 58 : 5-10, மத். 7 : 12, கலா. 6 : 9-10, எபே. 4 : 28.

# கர்த்தருடைய நாள் 43

**112. வினா : ஒன்பதாவது கற்பனையில் என்ன எதிர்பார்க்கப்படுகிறது?**

விடை : மற்றவர்களுக்கு விரோதமாக நான் பொய்ச் சாட்சி சொல்வதோ, அவர்களது வார்த்தையினை திரித்துக் கூறுவதோ, புறங்கூறுவதோ, கோள் சொல்லுவதோ, கண்டனம் பண்ணுவதோ அல்லது பிறருடன் சேர்ந்து கண்மூடித்தனமாக கேட்டறியாத வார்த்தைகளால் கண்டனம் பண்ணுவதோ, கூடாது.[1] சரியாகச் சொல்வதென்றால், நான் தேவ கோபாக்கினையையும், தண்டனையையும் கொண்டுவரும் பிசாசின் பணிகளான எல்லா பொய்வழிகளையும் ஏமாற்றும் தந்திரத்தையும் நான் கைவிடவேண்டும்.[2] வழக்கு மன்றத்திலும் அல்லது வேறெந்த இடத்திலும் நான் உண்மையை[3] விரும்புவது, கனத்திற்குரிய முறையிலே பேசுவதும் அறிக்கையிடுவதும் எனது அயலானின் கனத்தையும், மதிப்பையும் பாதுகாப்பதும், உயர்த்துவதுமான செயல்களில்[4] ஈடுபடவேண்டும்.

1. சங். 15, நீதி. 19 : 5, 9 : 21 : 28, மத். 7 : 1, லூக். 6 : 37, ரோமர் 1 : 28-32
2. லேவி. 19 : 11, 12 நீதி. 12 : 22, 13 : 5 யோவா. 8 : 44, நீதி. 21 : 8.
3. 1 கொரி. 13 : 6, எபே. 4 : 25.
4. 1 பேதுரு. 3 : 8, 9, 4 : 8.

# 44 கர்த்தருடைய நாள்

**113.வினா : நம்மிடமிருந்து பத்தாம் கற்பனை என்ன எதிர்பார்க்கிறது?**

விடை : எந்த நேரத்திலும் எந்தச் சூழ்நிலையிலும் தேவனுடைய கற்பனைகளுக்கு எதிரான நினைவுகள் அல்லது விருப்பங்கள் சிறிதேனும் நம் இருதயத்தில் எழும்பக் கூடாது. சரியாகக் கூறும்போது நமது முழு இருதயத்தோடும் எப்போதும் எல்லா பாவங்களையும் வெறுக்க வேண்டும். எல்லா நீதியின் காரியங்களுக்காக மகிழ வேண்டும்.[1]

1. சங். 19 : 7-14, 139 : 23, 24, ரோமர். 7 : 7, 8.

**114.வினா: தேவனிடமாய் திரும்பியவர்கள் இந்த எல்லா கற்பனை களையும் சரியாக பின்பற்ற முடியுமா?**

விடை : முடியாது.

இந்த வாழ்க்கையில் முற்றிலும் தேறின பரிசுத்தவான்கூட இப்படிப்பட்ட கீழ்ப்படிதலுக்கு[1] ஓர் எளிய தொடக்கத் தையே பெற்றிருக்கின்றார். அப்படியிருந்தாலும், அவர்கள், வேறெதற்காகவுமின்றி உரியதொரு நோக்கத்தோடு தேவனுடைய எல்லா கட்டளைகளையும் கைக்கொண்டு வாழத் தொடங்குகின்றனர்.[2]

1. பிரசங்கி. 7 : 20, ரோ. 7 : 14-15, 1 கொ ரி. 13 : 9.1 யோ. 1 : 8,
2. சங். 1 : 12, ரோ. 7 : 22-25, பிலி. 3 : 12-16.

**115.வினா : பத்துக் கட்டளைகளை அனைத்தையும் ஒருவர் கூட இந்த வாழ்க்கையில் பின்பற்ற முடியவில்லையெனில் ஏன் தேவன் கட்டாயமாக பிரசிங்கிக்கப்பட வேண்டுமென்கிறார்?**

விடை : முதலாவதாக, நமது வாழ்நாள் முழுவதிலும் நமது பாவத் தன்மையைக் குறித்து அதிகமதிகமாக அறிந்து கொள்கிறோம். ஆகையினாலே நாம் அதிதீவீரமாக இயேசு கிறிஸ்துவினால் வரும் பாவமன்னிப்பையும், நீதியையும் தேடுகிறோம்.[1]

இரண்டாவதாக, தேவனை நோக்கி பரிசுத்த ஆவியானவரின் கிருபைக்காக ஜெபிக்கும் போது நாம் தேவ சாயலைப் பெறும்வரை அதிகமதிகமாக புதுப்பிக்கப்படும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபடுவதோடு, இந்த வாழ்க்கைக்குப் பின்னுள்ள வாழ்க்கையை எட்டும் வரை பரிசுத்தத்தின் இலக்கை அடைய வேண்டுமென்ற எதிர்நோக்கில் செயல்படுகிறோம்.

---

1. சங். 32 : 5, ரோ. 3 : 19-26, 7 : 7, 24-25, 1 யோ. 1 : 9.
2. 1 கொரி. 9 : 24, பிலிப். 3 : 12-14, 1 யோ. 3 : 1-3

# ஜெபம்

## கர்த்தருடைய நாள் 45

**116.வினா : ஜெபம் கிறிஸ்தவர்களுக்கு எதற்காக தேவைப்படுகிறது?**

விடை: ஜெபம் நன்றியறிவித்தலின் முக்கியப் பங்காக இருப்பதினால் அதை தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார்.[1] மேலும் தேவன் தனது கிருபையையும் பரிசுத்த ஆவியையும் தம்மிடத்தில் தொடர்ந்து தங்கள் இருதயத்தை முற்றிலும் ஊற்றி இப்படிப்பட்ட வரங்களை கேட்கிறவர்களுக்கும் அவற்றிற்காக நன்றி செலுத்துபவர்களுக்கும் வழங்குகிறார்.[2]

1. சங். 50 : 14-15, 116 : 12-19, 1தெசலோ. 5 : 16-18.
2. மத். 7 : 7-8, லூக் 11 : 9-13.

**117.வினா : எப்படிப்பட்ட ஜெபம் தேவனுக்குப் பிரியமானதும் அவர் செவிகொடுக்கிறதுமாக இருக்கிறது?**

விடை: முதலாவதாக தம்முடைய வார்த்தையினால் தம்மை வெளிப்படுத்தியிருக்கிற ஒன்றான மெய் தேவன் நமக்கு ஜெபிக்கும்படி கட்டளையிட்டிருக்கிறவைகளினாலே நமது உள்ளத்திலிருந்து அழைக்க வேண்டும்.[1]

இரண்டாவதாக, நாம் நமது தேவையையும், பிரச்சினைகளையும் முற்றிலும் உணர்ந்தவர்களாக தேவனுடைய சமூகத்திலே நம்மை தாழ்த்தி ஒப்படைக்க வேண்டும்.[2]

மூன்றாவதாக, நாம் இந்த உறுதியான அஸ்திபாரத்தின் மேல் இருக்க வேண்டும். நாம் இதற்குத் தகுதி படைத்தவர்களில்லையென்றாலும் தம்முடைய வார்த்தையின் மூலம் வாக்குப் பண்ணியிருக்கபடி நமது ஆண்டவராகிய

இயேசு கிறிஸ்துவுக்காக தேவன் நமது ஜெபத்தை உண்மையாகவே கேட்பார்.[3]

1. சங். 145 : 18-20, யோ. 4 : 22-24, ரோ. 8 : 26-27 யா. 1 : 5, யோ. 5 : 14-15, வெளி. 19 : 10
2. 2 நாளா. 7 : 14, 20 : 12, சங். 2 : 11, 34 : 18, 62 : 8, ஏசா. 66 : 2, வெளி. 4
3. தானி 9 : 17-19, மத். 7 : 8, யோ. 14 : 13-14, 16, 23, ரோ. 10 : 13, யாக். 1 :6

**118.வினா : தேவன் தம்மை நோக்கி என்ன கேட்கும்படி கட்டளையிட்டிருக்கிறார்?**

விடை : நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கற்றுக்கொடுத்த ஜெபத்தில் சொன்னதைப்போலவே நாம் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் கேட்கவேண்டியது அவசியம்.[1]

1. மத். 6 : 33, யாக். 1 : 17.

**119.வினா : கர்த்தருடைய ஜெபம் என்றால் என்ன?**

விடை : பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக உம்முடைய இராஜ்யம் வருவதாக உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலே பூமியிலேயும் செய்யப்படுவதாக எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களை சோதனைக்குட்படப் பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும். ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.[1]

1. மத். 6 : 9-13, லூக். 11 : 2-4

# கர்த்தருடைய நாள் 46

**120. வினா : ஏன் இயேசு கிறிஸ்து தேவனை எங்கள் பிதாவே என்று அழைக்கும்படி கட்டளையிடுகிறார்?**

விடை : குழந்தையைப் போன்ற பக்தியையும், நம்பிக்கையையும் தேவனிடத்தில் கொள்வதே ஜெபத்தின் அடிப்படையாக இருக்க வேண்டும். இதை நாம் ஜெபிக்கத் தொடங்கும் போது நமக்கு அறிவுறுத்துகிறார். தேவன் இயேசு கிறிஸ்து மூலமாக நம் தகப்பனாக இருக்கிறார். நம் தகப்பன்மாரிடம் கேட்கும் உலகப்பொருள் தரமறுக்கப்படுகின்றதைவிட தேவனிடத்தில் விசுவாசமாக கேட்கும்போது எல்லா வற்றையும் அவர் தரமறுப்பதில்லை.[1]

1. மத். 7 : 9-11, லூக். 11 : 11-13

**121. வினா : பரமண்டலங்களிலிருக்கிற என்று ஏன் சொல்லப்படுகிறது?**

விடை : இந்த வார்த்தைகள் நமக்குக் கற்றுத் தரும் பாடமென்ன வெனில் தேவனுடைய பரலோக மகத்துவத்தை பூலோக கண்ணோட்டத்தோடு நினைத்துப் பார்க்கக் கூடாது.[1] அது மட்டுமல்ல, நமது ஆவி ஆத்துமாவுக்கு தேவையான வற்றையும் அவரது சர்வ வல்லமையினால் தரவல்லவர் என்ற எதிர்பார்ப்போடிருக்க வேண்டியதையும் நமக்குக் கற்றுத் தருகிறது.[2]

1. எரே. 23 : 23-24, அப். 17 : 24-25
2. மத். 6 : 25-34, ரோ. 8 : 31-32

# கர்த்தருடைய நாள் 47

**122. வினா : முதலாவது விண்ணப்பம் என்ன?**

விடை : உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக எப்படியெனில், முதலாவதாக உமது சர்வ வல்லமை, ஞானம், நன்மை, நீதி, இரக்கம், உண்மை[1] விளங்கும். உமது கிரியைகள் அனைத்திற்காகவும், உமக்குப் பரிசுத்தத்தையும், மகிமையையும், துதியையும் செலுத்தவும், உம்மைச் சரியாகப் புரிந்துகொள்ளவும்[2] எங்களுக்கு அருளும். எங்களுடைய முழு வாழ்க்கையும், எங்கள் நினைவுகள், வார்த்தைகள், செய்கைகள் யாவற்றாலும் உமது நாமம் தூசிக்கப்படாத படிக்கு நாங்கள் எப்பொழுதும் உம்மை கனப்படுத்தவும் துதிக்கவும் கூட அருள்புரியும்.[3]

1. யாத். 34 : 5-8, சங். 145. எரே. 32 : 16-20, லூக். 1 : 46-55, 68 : 75, ரோ. 11 : 33-36.
2. எரே. 9 : 23-24, 31 : 33-34, மத். 16, 17. யோ. 17 : 3
3. சங். 115 : 1, மத். 5 : 16.

# கர்த்தருடைய நாள் 48

**123.வினா : இரண்டாவது விண்ணப்பம் என்ன?**

விடை : உமது இராஜ்ஜியம் வருவதாக எப்படியெனில் உமக்கு முன்பாக அதிகமதிகமாக தாழ்மைப்படுவதற்கு நமது வார்த்தையாலும் ஆவியினாலும் எங்களை ஆளுகை செய்யும்[1]. உமது திருச்சபையினை காப்பாற்றும் பெருகச் செய்யும்[2]. பிசாசின் வேலைகளையும் உமக்கு விரோதமாக எழும்பும் வல்லமைகள் ஒவ்வொன்றையும் உமது பரிசுத்த வசனத்திற்கு விரோதமாக சொல்லப்படும் பொல்லாப்பையும்[3] அழித்துவிடும். ஒருவரே எல்லாவற்றிற்கும் எல்லாமாக இருப்து முழுமைபெற்ற உமது இராஜ்ஜியம் வரும்வரை இவற்றையெல்லாம் செய்யும்.[4]

1. சங். 119 : 5, 105, 143 : 10, மத். 6 : 33
2. சங். 51 : 8, 122 : 6-9, மத். 16 : 18, அப். 2 : 42-47.
3. ரோ. 16 : 20, 1 யோ. 3 : 8
4. ரோ. 8 : 22-23, 1கொ. 15 : 28, வெளி. 22 : 17, 20.

# கர்த்தருடைய நாள் 49

**124.வினா : மூன்றாவது விண்ணப்பம் என்ன?**

விடை: உமது சித்தம் பரத்திலே செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக. எப்படியெனில், உமது சித்தம் மாத்திரமே நல்லதாக இருப்பதினாலே. மனிதர்களாகிய நாங்கள் அனைவரும் எந்த முறுமுறுப்புமில்லாமல் எங்களது சித்தத்தை களைந்துவிட்டு உமது சித்தத்திற்கு கீழ்படிய அருள்புரியும்[1]. அதுமட்டுமல்லாது வானதூதர்கள் யாவரும்[2] தங்கள் முழு இருதயத்தோடும் உண்மையோடும் தங்களது பொறுப்புகளைச் செய்வது போல உம்முடைய அழைப்புக்குப் பாத்திரவான்களாக[3] எங்களுக்கென நீர்கொடுத்த பணியை நிறைவேற்ற அருள்புரியும்.

---

1. மத். 7 : 21, 16 : 24-26, லூக். 22 : 42, ரோ. 12 : 1-2 தீத்து 2 : 11, 12.
2. சங். 103 : 20, 21
3. 1 கொரி. 7 : 17-24, எபே. 6 : 5-9

# கர்த்தருடைய நாள் 50

**125. வினா : நான்காவது விண்ணப்பம் என்ன?**

விடை : அன்றன்றுள்ள ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எப்படியெனில் : நீரே எல்லா நன்மைக்கும் ஊற்றும் காரணமாயிருக்கிறபடியினாலே[1] நாங்கள் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்க எங்கள் சரீர தேவைகள் யாவையும்[2] சந்தியும் உம்முடைய ஆசீர்வாதத்தாலன்றி நாங்கள் படும் பிரயாசங்கள் கவனிப்புகள, உமது வரங்கள் யாவும் எங்களுக்கு நன்மையை கொண்டு வருவதில்லை.[3] ஆகையினாலே உமது படைப்புகளெள்ளாவற்றின் மேலும் வைத்திருக்கிற எங்கள் நம்பிக்கையை விட்டுவிட்டு உம்மையே நாங்கள் சார்ந்திருக்க அருள்புரியும்.[4]

1. சங். 104 : 27-309, 145 : 15-16, மத். 6 : 25-34
2. அப். 14 : 17, 17 : 25, யாக் 1 : 17
3. உபா. 8 : 3, சங். 37 : 16, 127 : 1-2 1கொ. 15 : 58.
4. சங். 55 : 22, 62 : 146, எரே. 17 : 5-8, எபி. 13 : 5-6

# கர்த்தருடைய நாள் 51

**126.வினா : ஐந்தாவது விண்ணப்பம் என்ன?**

விடை : எங்கள் கடன்காரர்களுக்க நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எப்படி யெனில் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினிமித்தமாக எங்கள் பிழைகளை தவறுகளை அல்லது எங்களை இன்னும் தொற்றிக்கொண்டிருக்கும் பொல்லாங்கினாலோ கொடும்பாவிகளென்று முத்திரை குத்திவிடாதிரும்.[1] மேலும் உம்முடைய கிருபை எங்களிலிருப்பதை தெரிந் திருக்கிறபடியினாலே நாங்கள் முழு இருதயத்தோடும் எங்கள் அயலாரின் குற்றங்களை முற்றிலும் மன்னிக்கத் தீர்மானித்திருக்கிறோம்.[2]

1. சங். 51 : 1-7, 143 : 2, ரோ. 8 : 1, 1. யோ. 2 : 1, 2
2. மத். 6 : 14-15, 18 : 21-35.

# 52 கர்த்தருடைய நாள்

**127.வினா : ஆறாவது விண்ணப்பமென்ன?**

விடை : எங்களை சோதனைக்குட்பண்ணாதிரும். ஆனாலும் தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும். எப்படி யெனில் : நாங்கள் எங்களிலே பலவீனமாக இருப்ப தினாலே ஒரு நிமிடம் கூட நிலைநிற்க முடியவில்லை.[1] அதுமட்டுமின்றி எங்களின் தீவிரப் பகைவர்களான பிசாசு[2] உலகம்[3] எங்கள் சொந்த மாமிசம்[4] (சரீரம்) இவைகள் தாக்காதபடி செய்யும். நீர் எங்களை சோர்ந்து போகாத படிக்கு தூக்கி நிறுத்தி அதனால் ஆவிக்குரிய போராட் டத்தில் தோற்றுப்போகாதபடி[5] தொடர்ந்து பகைவர்களை தீவீரமாக எதிர்த்து இறுதியில் முற்றிலும் ஜெயங் கொள்ளும்படி[6] உமது பரிசுத்த ஆவியானவரின் வல்லமை யினால் எங்களை பெலப்படுத்தும்.

1. சங். 103 : 14-16, யோ. 15 : 1-5
2. 2கொ. 11 : 14, எபே. 6 : 10-13, 1பேதுரு. 5 : 8
3. யோ. 15 : 18-21.
4. ரோ. 7 : 23, கலா. 5 : 17
5. மத். 10 : 19-20, 26 : 41, மாற்கு 13 : 13, ரோ. : 3-5
6. 1 கொரி. 10 : 13, 1தெச. 3 : 13, 5 : 23.

**128.வினா : உன்னுடைய ஜெபத்தை எவ்வாறு முடிப்பாய்?**

விடை : அதேனென்றால் இராஜ்ஜியமும் வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உமக்கே உண்டாவதாக. எப்படியெனில் : நாங்கள் இவைகள் அனைத்தையும் உம்மிடம் ஏன் கேட்கிறோமென்றால் நீரே எங்கள் இராஜாவும் எல்லாவற்றின் மேலும் அதிகாரமுள்ளவரும். எங்களுக்கு நல்லவகைகள்[1] அனைத்தையும் வழங்குவதற்கு விருப்பமுள்ளவரும் கொடுக்க திராணியுள்ளவருமாயிருக்கிறீர். (போதுமானவராக) எங்களுடைய நாமம் அல்ல. உம்முடைய பரிசுத்த நாமமே எல்லா மகிமையையும் என்றென்றைக்கும் பெற்றுக்கொள்ள பாத்திரமாக இருக்கிறது.[2]

1. ரோ. 10 : 11-13, 2 பே. 2 : 9
2. சங். 115 : 1, எரே. 33 : 8, 9, யோ. 14 : 13

**129.வினா: ஆமென் என்ற வார்த்தைக்கு அர்த்தமென்ன?**

விடை : ஆமென் என்பதற்கு அது உண்மையிலும் உண்மையே. தேவன் நான் என் இருதயத்தில் நினைக்கும் நினைவுக்கு மேலாக என் ஜெபத்தைக் கேட்டு பதில் செய்கிறவராக இருக்கிறார். இதையே நான் அவரிடத்தில் விரும்புகிறேன்.[1]

1. ஏசாயா. 65 : 24, 2கொரி. 1 : 20, 2தீமோ. 2 : 13.